Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

அனங்கின் அமைதியின்மை



சூதக கோளாறுகளை நிவர்த்தித்து ஆரோக்கியத்தை அளிக்கவல்லது

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்

K.L.E-9

தயாரிப்பவர்கள்:

கேஸரி குடீரம் லிமிடெட்.,
மதராஸ்.

தமிழ்நாடு ஏஜெண்டுகள்:

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
மேல கோபுர வீதி :: மதுரை.

4 Shades Whiter in 4 Weeks



சாஸ்திரீய முறை கருத்த மேனியை வெண்மையாகவும், அப்பழுக்கற்றதாகவும் மாற்றுகிறது

அதிசயிக்கத் தக்க தங்கள் முகப் பொலிவு, சாஸ்திரீயமாக வெண்மையளிக்கும் "ப்ளாரோஸோன்" உதவியினால் அழகிய மேனியைப் பெற்று அதன் விளைவாகத் தங்களுக்குக் கிட்டும் ஓர் பரிசு. இது வருஷக் கணக்கான ஆராய்ச்சியின் பலன். இதில் அமோனுக்ளினுடன் கூடிய ஓஸோன் என்னும் முக்கிய சத்து இருக்கிறது. இந்த சரக்குகள் சருமத்தினுள் வெகு தூரம் சென்று, கருத்த ரோமத் துவாரங்களை வெண்மையுறச் செய்து, சருமத்திற்குப் போஷாக்களித்து, பருக்களை அகற்றி, இதர சருமக் கோளாறுகளையும் நீக்க உதவுகிறது. "ப்ளாரோஸோன்" உபயோகிப்பது மிக சுலபம். முற்றிலும் தீங்கற்றது. ஒரு பாட்டில் வாங்குங்கள். விரைவில் உங்கள் முகப் பொலிவைக் கண்டு நீங்களே அதிசயிப்பீர்கள். முழு சிகிச்சை (ஒரு பாட்டில்) ரூ. 4/-

"ப்ளாரோஸோன்" தற்போது கான்ஸென்ட்ரேட்டட் க்ரீமாக ஜாடி ஒன்று ரூ. 5/4-க்கு கிடைக்கும்.




எங்கும் கிடைக்கும்.

ப்ளோரசீ லிட்., த. பெ. 875, பம்பாய்.
சென்னை ராஜதானி டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
வைத் இந்தியா ஏஜன்ஸீஸ், 117, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

கல்கி



KALKI மே 7, 1944 4 அணா



நல்ல உயர்ந்த பண்டங்களையே விரும்புவோருக்கு

நமக்கு கட்டாவிடினும் நம்மில் எல்லோரும் மேன்மையான பண்டங்களையே விரும்புகிறோம். கெரெட்டில் சிறந்த புகையிலையை உபயோகித்தால்தான் அது விரும்பி பலராலும் சிறந்ததென்று சொல்லப்படும். டிலக்ஸ் டெனர் கெரெட் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. பலரும் வாங்கி ஆனந்தமாக அனுபவிக்கலாம். உத்தர வாதமுள்ள 100% வர்ஜீனியா புகையிலைகளாலேதான் டிலக்ஸ் டெனர் சிகெரெட்டுகள் செய்யப்படுகின்றன.

tenor

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட்., லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD. LONDON. EASTERN LICENCEES. POST BOX No. 470, CALCUTTA

டைகர் வரதாச்சாரியார்

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

இவருடைய கான வித்தையின் பாண்டித்யத்தை நான் இவருடைய பால்ய காலம் முதல் தெரிந்துகொள்ள முடியவில்லை. நான் தெரிந்துகொண்டதிலிருந்து சங்கீத சாஸ்திரத்தில் விசேஷ ஆராய்ச்சிகள் செய்து அநேக தக்க வித்வான்களால் கொண்டாடப்பட்டு வருகிறார். இவர் அடைந்திருக்கும் யோக்கியதைக்கு, கர்வலேசமில்லாமல் ரொம்ப சுலபராய் எல்லோருடனும் பழகக் கூடியவர்.

பாடுகிறதற்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கக்கூடிய நுட்பமான ராகங்களிலும் நுழைந்து ராகத்தினுடைய பாவத்தைப் பூர்த்தியாய் வெளிக்காட்டி கன ராகங்களில் சஞ்சாரம் செய்வது போல் செய்து, ஸ்வரங்களைப் பாடி ஜனங்களைச் சந்தோஷப்படுத்தக் கூடியவர். என்னிடத்தில் ரொம்பப்பிரியமும் அன்பும் உள்ளவராகையால் அநேகம் தடவை இவருடைய கச்சேரியைக் கேட்கச் சந்தர்ப்பங்கள் நேர்ந்தது. இவருடைய ஆழ்ந்த கர்நாடக ஞானம் ரொம்பவும் மெச்சத் தகுந்தது. அபாரமாய்க் கியாதி வாங்கின மஹா வைத்தி நாதய்யர், பட்டணம் சுப்ரமணிய அய்யர் இவ்விருவர்களிடத்திலும் மிக்க அன்பு பாராட்டி, குருபக்தியுடன் அவர்களிடத்திலிருந்து கேட்டுவந்த மார்க்கங்களைத் தம்முடைய பாட்டுக் கச்சேரிகளிலும் உபயோகப்படுத்திச் சந்தோஷத்தை அநுபவிப்பார்.

ஸ்ரீ தியாகப் பிரும்மத்தினிடத்தில் இவர் வைத்திருக்கிற பக்தியானது வேறு ஒருவருக்கும் ஏற்படாது என்றே சொல்லலாம். ஸ்ரீ தியாகப் பிரும்மத்தினுடைய கீர்த்தனங்களையும், அடுத்தபடியாகப் பட்டணம் சுப்ரமணிய அய்யர் கீர்த்தனங்களையும் இவர் மிக்க ஊக்கத்துடனும் சந்தோஷத்துடனும் சுத்தமாய்ப் பாடுவார். மத்தியில் அவைகளுக்கு ஸ்வரம் பாடும்பொழுது, பாடுகிற ஒவ்வொரு ஆவர்த்த ஸ்வரமும் கெட்டி ஸ்வரம் மாதிரியே தோன்றும்.

கான வித்தையின் மர்மத்தைத் தானும் அநுபவித்துக் கொண்டு மற்றவர்களுக்கும் சந்தோஷத்தைக்கொடுப்பதில் மிகச் சிறந்தவர். ரொம்ப சொற்ப யோக்கியதை உடையவர்களின் பாட்டைக் கேட்டாலும், அதை நிஜமாகவே மெச்சிக் கொண்டாடிப் பெருமைப் படுத்துவார். ஸ்ரீ தியாகப் பிரும்மத்தின் கீர்த்தனங்களை வித்வான்கள் சாஹித்ய சுத்தமாகவும் அழகாகவும் பாடும்பொழுது இவர் மனது அதில் லயித்து மிக்க உருகி, கண்ணீர் சொரிவதை நான் பார்த்திருக்கிறேன். இதற்கு முக்கிய காரணம், பிரும்மத்தினிடத்தில் அவர் வைத்திருந்த நிஜ அன்பும், கீர்த்தனங்களின் அர்த்த பாவமும், வர்ண மெட்டின் மகிமையும்தான் என்று சொல்ல வேண்டும். இவருடைய உத்தம ஞானத்திற்குத் தகுந்தபடி சாரீரம் அமையாததால் சாமான்ய பாமர ஜனங்கள் இவருடைய கானத்தின் குணத்தை நன்றாய்த் தெரிந்து கொள்ள பாக்கியமில்லாதவர்களானார்கள்.

இவருடைய கான வித்தையின் கௌரவத்தைக் கண்டறிந்தே இவரைச் சென்னை சர்க்கார் சங்கீதக் கலாசாலையில் 'பிரின்ஸிபா'லாக நியமித்தார்கள். சில காலம் ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் சர்வகலாசாலையில் பிரதம சங்கீத போதகராயிருந்து கௌரவத்துடன் விளங்கி வந்தார்.



★

கிணற்றுத் தவளை!

பெண் தவளை:—ஊரெல்லாம் ஒரே சண்டையாயிருக்குதாமே, உனக்குத் தெரியுமோ?

ஆண் தவளை:—தெரியாதே.

பெண் தவளை:—இதென்ன, நீ கத்தக் கிணற்றுத் தவளையா'யிருக்கியே! எங்கே பார்த்தாலும் ஒரே யுத்தமாயிருக்கிறது; ஒன்றுமே தெரிஞ்சுக்காமல் இருக்கியே?

★



அநாதை ஆசிரமம்

பகீரதன்

தேசத்துக்கு ஏதாவது உருப்படியான காரியம் செய்ய வேண்டும் என்று எண்ணங் கொண்ட ஸ்ரீமான் ஆத்மசகாயம் அரும்பாடுபட்டு ஒரு அநாதை ஆசிரமத்தை ஸ்தாபித்தார்.

ஏழை இந்தியாவில் அநாதைக் குழந்தைகளுக்குப் பஞ்சமா என்ன? வேண்டிய குழந்தைகள் கிடைத்தனர். நாளுக்கு நாள் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாயிற்றே ஒழிய ஆசிரமத்துக்கு வேண்டிய மூலதனம் மட்டும் வளர்ந்த பாடாயில்லை. அதற்காக அவர் பல பெரிய மனிதர்கள் வீட்டுக்குப் போய் அவர்களுடைய பேட்டிக்காகக் காத்துக் கிடந்தார். ஆத்மசகாயத்தை இருக்கச் சொல்லிவிட்டு அவரே அந்த இடத்தை விட்டுப் போகும்வரை, பேசாமல் தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்த பெரிய மனிதர்கள் எத்தனையோ பேர்; "வேலையில்லாதவன்; அநாதைக் குழந்தைகளாம், ஆசிரமமாம்" என்று எரிந்து விழுந்தவர்கள் எத்தனையோ பேர்.

ஒரு நாள் ஆத்மசகாயத்தைத் தேடிக் கொண்டு அவருடைய நண்பர் அனந்தராமன் வந்து சேர்ந்தார். "என்ன ஆத்மசகாயம்! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று அவர் ஆத்மசகாயத்தைக் கேட்டார்.

"ஒன்றுமில்லை; எல்லாம் ஆசிரமத்துக் கவலைதான். ஊரிலிருப்பவர்கள் எல்லாம் என்னை இந்திரன் சந்திரன் என்று வாயாரப் புகழுகிறார்கள். ஆனால் ஏதாவது பண உதவி செய்யுங்கள் என்று கேட்டால், 'வேலையில்லை; அவனவன் பாட்டுக்கே கஷ்டமாயிருக்கிறது; ஆசிரமத்துக்குப் பணம் வேண்டுமாம்!' என்று ஏளனமாய்ச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்" என்று வருத்தமும் ஆத்திரமும் கலந்த குரலில் பதிலளித்தார் ஆத்மசகாயம்.

"இவ்வளவுதானே! இப்பொழுது நான் உமக்கு ஒரு நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறேன். ஆசிரமத்துக்கு இனி ஒரு குறையுமில்லை. சமீபத்தில் செல்லப் பிள்ளையார் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்தாரே வாசுதேவப் பிள்ளை, அவர் உம்மைப் பற்றி விசாரித்தார். உம்முடைய ஆசிரமத்தைப் பற்றியும் பிரமாதமாகச் சொன்னார். இன்று ஆசிரமத்தைப் பார்வையிட வருவார். அவர் வந்தால் நிச்சயமாக ஏதாவது ஆசிரமத்துக்குக் கொடுப்பார்" என்றான் அனந்தராமன்.

இதைக் கேட்டதும், ஆத்மசகாயத்துக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அவசரம் அவசரமாக ஆசிரமத்துக்குள் ஓடினார். குழந்தைகளை யெல்லாம் சுத்தமாக உடை அணிந்து கொள்ளச் சொன்னார். ஆசிரமத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்யச் சொன்னார். வாசுதேவப் பிள்ளையை வரவேற்பதற்கு வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஆசிரமத்து வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. வாசுதேவப் பிள்ளை, அவர் மனைவி, இரண்டு குழந்தைகள் எல்லாரும் வந்து இறங்கினர். ஆத்மசகாயம் அவர்களை வரவேற்று உபசரித்தார். வழக்கம்போல் ஆசிரமத்தைச் சுற்றிக் காண்பித்தார். அங்கிருந்த அநாதைக் குழந்தைகளை யெல்லாம் பார்த்த வாசுதேவப் பிள்ளை, "உங்களுடைய முயற்சி மிகவும் பாராட்டக் கூடிய முயற்சிதான். எங்கு பார்த்தாலும் உங்களுடைய ஆசிரமத்தைப் பற்றித்தான் பேச்சு. உங்களுடைய முயற்சியையும் சிரத்தையையும் பார்த்து விட்டு, எனக்கும் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று ரொம்ப நாளாக ஆசை. அதற்காகத்தான் இந்தத் தாய் தந்தையற்ற அநாதைக் குழந்தைகளைத் தங்களுடைய ஆசிரமத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தேன்!" என்று சொல்லித் தன் பக்கத்தில் நின்ற இரண்டு குழந்தைகளையும் ஆத்மசகாயத்திடம் ஒப்புவித்தார்!

அப்பொழுது ஆத்மசகாயத்தின் தோற்றம் அந்த அநாதைக் குழந்தைகளின் தோற்றத்தைவிட மிகவும் பரிதாபமாக இருந்தது!

படித்துப் பார்!

சர்வ தேசக் கதைகள் (மலர் 1, 2.)

[பிரசுரம்: ஜோதி பிரசுராலயம்; விலை: ஒவ்வொன்றும் அணா எட்டு.]

இத்தொகுதியின் முதல் மலருக்குக் 'காதற் கதை' என்று பெயர். நோபல் பரிசு பெற்ற பிரபல இதாலிய ஆசிரியை கிரேஸியா டெலட்டா என்பவர் எழுதிய காதற் கதையை வெகு அழகாக மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார் க. நா. சு. லொரான்ஸோ ராஸி என்ற இதாலிய இளைஞன் ஒரு பத்திரிகையில் எழுதிய 'கருணை' என்ற கட்டுரையைப் படித்து விட்டு, ஒரு ஜெர்மன் யுவதி அவன் மீது காதல் கொள்கிறாள். அந்தக் கட்டுரையில் வந்த ஒரு முக்கிய சம்பவம், அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் நடந்த ஒரு மகத்தான சம்பவத்தை அவளுக்கு நினைவூட்டுகிறது. இருவருக்கும் கடிதப் போக்கு வரத்து நடந்து, முடிவில் அந்த யுவதியை லொரான்ஸோ எதிர்பாராத விதத்தில் நேரில் சந்திக்கிறான். இருவரும் பேரானந்த மடைகிறார்கள். உணர்ச்சி ததும்பும் இந்தக் கதை படிப்பதற்கு மிகவும் ரஸமாயிருக்கிறது.

இரண்டாவது மலர், எமிலி ஸோலா எழுதிய 'வெற்றி' என்ற பிரெஞ்சுக் கதையின் மொழிபெயர்ப்பு. யுத்தத்தால் பாதிக்கப் பட்ட ஒரு பிரெஞ்சுக் குடும்பத்தின் கதை. சாவிலிருந்து தந்தையைக் காப்பாற்றுவதா, அல்லது காதலனைக் காப்பாற்றுவதா என்ற நெருக்கடியான நிலைமை பிரான்ஸா என்ற பெண்மணிக்கு ஏற்படுகிறது. இந்தக் கதையின் சோக முடிவு, வாசகர்கள் உள்ளத்தைக் கலக்கி மெய் சிலிர்க்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. அற்புதமான கதை; அழகான மொழிபெயர்ப்பு.

இம்மாதிரி அழகிய சர்வதேசக் கதைகளை மொழிபெயர்த்து மாதாமாதம் ஒரு புத்தகமாகக் கொடுக்கப் போவதாக இப் பிரசுராலயத்தார் பயமுறுத்துகிறார்கள். பேஷாகக் கொடுக்கட்டும். நாம் எல்லாவற்றிற்கும் தயாரா யிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி

[பிரசுரம்: விவேக சிந்தாமணி, மைலாப்பூர், சென்னை; விலை: ரூ. 1—0—0]

ஒருவருடைய அருமை பெருமையை எடுத்துச் சொல்லும்போது 'ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் அதை வர்ணிக்க முடியாது' என்று அலங்காரமாகச் சொல்லுவார்கள். காலஞ்சென்ற தலைவர் ஸ்ரீ சத்திய மூர்த்தி விஷயத்தில் இது முற்றிலும் பொருந்தமா யிருக்கும். அவரைப் பற்றி எவ்வளவு எழுதினால்தான் என்ன? எவ்வளவு பேர் எழுதினால்தான் என்ன, அவரைப் பற்றி முற்றிலும் எழுதியதாக இருக்க முடியாது. அதனால்தான் அவரைப் பற்றி எவ்வளவு நூல்கள் வெளிவந்த போதிலும் அவற்றை ஆவலுடன் வரவேற்கிறோம். பலகலைஞர்கள் சத்தியமூர்த்தியைப் பற்றி எழுதிய ரஸமான கட்டுரைகள் இப் புத்தகத்தில் காணப்படுகின்றன. புஸ்தகம் வெகு கச்சிதமாக அமைந்திருக்கிறது.

கதைக் கோடி

[பிரசுரம்: ஆசிய ஜோதி, தியாகராயநகர், சென்னை; விலை: ரூ. 2—8—0.]

தமிழ் நாட்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் பலரின் இனிய சிறு கதைகள் இத் தொகுதியில் வெளியாகி யிருக்கின்றன. அலமுவின் அறியாமை, நாஸ்திகன், ராட்டினம்—இம் மூன்று கதைகளில் நவரஸங்களும் ததும்புகின்றன. கார்னிவல் என்னும் கதை மனதைத் தொட்டுக் குலுக்கும் ரகத்தைச் சேர்ந்தது. முன் தலைமுறை, தெய்வ சங்கல்பம் முதலிய கதைகள் மிகவும் நன்றா யிருக்கின்றன. சிறுகதை எழுதும் கலையில் தமிழ் நாடு அடைந்திருக்கும் முன்னேற்றத்துக்கு இப் புஸ்தகம் ஓர் அத்தாட்சியாகும்.

★

நல்ல யோசனை!

மனைவி:—மாப்பிள்ளையைப் போய் இப்படி கோபித்துக் கொண்டு விட்டேனே! அவர் இனிமேல் இந்த வீட்டில் காலடி வைக்க மாட்டேன் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். என்ன பண்ணுகிறது?

புருஷன்:—வீட்டை மாற்றி விட்டால் போகிறது!

—பாலு.

★



சொல்லும் செயலும்

கு. ரா.

இரண்டு சிநேகிதர்கள் நெடு நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கடைசியில் ஒருவர் எழுந்திருக்கிறார்: "அப்போ சரி, நான் வரட்டுமா?" என்கிறார். இதைக் கேட்கும் மற்றவர், "சரி, வாங்கோ" என்று பதில் சொல்கிறார்! வீட்டுக்குள் வரும்பொழுது வருகிறவர் கேட்டுக்கொண்டு வரவேண்டிய கேள்வியும், வரவேற்கிறவர் அப்பொழுது சொல்ல வேண்டிய பதிலும் வீட்டை விட்டு வெளியே போகும் பொழுது உபயோகிக்கப் படுகின்றன!

சங்கீதத்தை வெளிப்படையாக ரசித்து அநுபவிக்கும் ஒருவரைக் கவனியுங்கள். பாடகர் சங்கராபரண ராகத்தைச் சங்கரன் வேறாகவும் அவர் ஆபரணம் வேறாகவும் பிய்த்து அலசி ஒரு மணி நேரமாக ஆலாபனை செய்துவிட்டுப் பிறகு ஒரு பாட்டைப் பாடி முடிக்கிறார். பாடகர் பாடிக் கொண்டிருக்கும் போதெல்லாம் மேற்சொன்ன ரசிகர் நடுநடுவில், "த்ஸொ த்ஸொ" "ஐயோ" "அடடா!" "கொல்கிறாரே" என்றெல்லாம் அங்கலாய்க்கிறாரே, ஏன்? கச்சேரி முடிந்ததும் அவரைக் கேளுங்கள், "பாட்டு எப்படி?" என்று. "அமர்க்களம்" என்பார் அவர். உண்மையில் கச்சேரி யுத்த களமாக இருந்ததா, என்ன? இல்லை; சில சோடாக்கள் உடைபட்டதும், கஞ்சிரா ஜல்லடைக் கண்ணானதும், மிருதங்கம் கிழிந்து ஒழிந்ததும், கடம் செவிடுபட ஒலித்ததும், பாடகருக்கு வியர்வை ஆறாகப் பெருகியதும், சில ராகங்கள் கொல்லப்பட்டதும் தவிர, கச்சேரியில் வேறு என்ன சேதம் ஏற்பட்டது?



ஒரு பெரிய மனிதர் தேர்தலுக்கு 'நிற்கிறார்' என்று நாம் சகஜமாய்ச் சொல்கிறோம். ஆனால், உண்மையில் அவர் நிற்கிறாரா? கிடையாது. தேர்தல் முடிவு தெரியும்வரை அவர் ஓரிடத்திலும் நிற்காமல் காற்றாய்ப் பறக்கிறார். தேர்தலில் வெற்றி யடைந்து விட்டாலோ, படுத்துத் தூங்கப் போய் விடுகிறார். தோல்வி யடைந்தாலோ, அந்த விசனத்தில் அவர் உட்கார்ந்து விடுகிறார்!

ஒரு குறிப்பிட்ட பேசும் படம் 'நன்றாக ஓடுகிறது' என்கிறோம். 'நன்றாக ஓடுகிறது' என்பதின் உண்மை அர்த்தம் என்னவாக இருக்கும்? அந்தப் படத்தைப் பார்க்க ஜனங்கள் நான்கு திக்குகளினின்றும் ஓடி வருகிறார்கள் என்று வலிந்து பொருள் கொண்டால் தான் சரியாக இருக்கிறது.

இப்பொழுது பத்திரிகைகளில், "நமது வெற்றிகரமான தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல் விரோதி பின் வாங்கினான்" என்றும் செய்தியை அடிக்கடி படிக்கிறோம். 'பின் வாங்குதல்' என்றால், முன்னேற வேண்டிய திசைக்கு நேர் எதிர்த் திசையில் திரும்பி முன்னேறுவது தானே பின் வாங்கல்!


அடிக்கடி பத்திரிகைத் தலையங்கங்களில் "கர்னல் அமெரியை எடுத்துக் கொள்வோம்" என்று படிக்கிறோம். இதே ரீதியில் ஆசிரியர், "இன்று ஸர் முகம்மது உஸ்மானை எடுத்துக் கொள்வோம்" என்று எழுதினால் வாசகர்கள் ஒரு சிறிதும் தயங்க மாட்டார்களா? உஸ்மானை எடுக்கும் வல்லமை நம்மில் யாருக்கு உண்டு?

கடைசியாக, இத்தனை உதாரணங்களையும் தூக்கி அடிக்கக்கூடிய உதாரணம் ஒன்று உண்டென்றால், அது இந்த கவர்னரின் ஆலோசனையாளர்கள் தங்களைப் பொதுஜன ஊழியர்கள் என்று கூறிக் கொள்வதுதான். நாம் சொல்வதுபோல் அவர்கள் ஏதாவது செய்கிறார்களா? கிடையாது! சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள வித்தியாசத்துக்கு இதை விடப் பெரிய உதாரணம் வேறு என்ன வேண்டும்?

திருடன் யார்?

பாரு

சோமு, கிட்டு, முத்து மூவரும் இளைப்பில் உட்கார்ந்து வெகு சுவாரஸ்யமாகச் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்று கிட்டு யார் முகத்தில் விழித்தானோ, ஒவ்வொரு ஆட்டத்திலும் அவனுக்கு லாபம் கிடைத்தது. ஒரு ரூபாயை வைத்துக் கொண்டே பத்து ரூபாய் சம்பாதித்து விட்டான்!



அவனிடமிருந்த பத்து ரூபாயும் சில்லறையாயிருந்தமையால், சில்லறையை முத்துவிடம் கொடுத்து ஒரு முழுப் பத்து ரூபாய் நோட்டாக மாற்றித் தரும்படி சொல்லி விட்டு, தான் ஏதாவது டிபன் வாங்கிச் சாப்பிடலாமென்று பாக்கி சில்லறையை எடுத்துக் கொண்டு பக்கத்திலுள்ள ஓட்டலுக்குச் சென்றான். சாப்பிட்டுத் திரும்பியதும் முத்து, சீட்டைக் குலுக்கிக் கொண்டே "டேய் கிட்டு, உன்னுடைய பத்து ரூபாயை உன்னுடைய 'கல்கி' பத்திரிகையிலேயே வைத்து விட்டேன். எடுத்துக் கொள்" என்றான். கிட்டுவின் 'கல்கி' அப்பொழுது சோமுவின் கையிலிருந்தது. கிட்டு அவனிடமிருந்து அதை வாங்கிப் பத்து ரூபாய் நோட்டு இருக்கிறதா என்று புரட்டினான். நோட்டு அதனுள் காணப்படவில்லை.

"என்னடா முத்து, நோட்டைக் காணோமேடா?" என்றான் கிட்டு.

"என்ன? இல்லையா? நான் அதில் தானே வைத்தேன். சோமுகூடப் பார்த்துக் கொண்டிருந்தானே!" என்றான் முத்து.

"ஆமாண்டா, நான் 'கல்கி'யைக் கையிலே எடுத்தபோதுகூட அது நழுவிக் கீழே விழுந்தது. திருப்பி எடுத்து அதிலேயே வைத்தேனே!" என்றான் சோமு.

"பின்னே எங்கேடா போகும்? உங்க ரெண்டு பேரைத் தவிர வேறு யாரடா இந்தக் கல்கியைத் தொட்டா?"

"என்னடா! இன்னும் கொஞ்ச நாழி போனால் நாங்கள்தான் திருடினோம் என்று சொல்லுவாய் போலிருக்கே. கீழே விழுந்த அந்த நோட்டைத் திரும்ப வைக்கும்பொழுது பக்கத்தைக் கூட மனதில் குறித்து வைத்துக் கொண்டேனாக்கும்! 23-ம் பக்கத்திற்கும் 24-ம் பக்கத்திற்கும் நடுவிலேதான் வைத்தேன். இதைவிட வேறு உனக்கு என்ன வேண்டும்?" என்று எரிந்து விழுந்தான் சோமு.

என்ன செய்வது என்று தெரியாமல் கிட்டு திகைத்துக் கொண்டிருக்கும் பொழுது சமய சஞ்சீவியாக ஹனுமந்த ராவ் வந்து சேர்ந்தார். சோமுதான் திருடன் என்று தீர்ப்பளித்தார் சஞ்சீவி ராவ். எப்படி?

உங்கள் "கல்கி" பத்திரிகையை எடுத்து, 23-ம் பக்கத்துக்கும் 24-ம் பக்கத்துக்கும் இடையில் ஏதாவது வைக்க முடிகிறதா, பாருங்கள்!

வந்த ஆசாமி

ஸோமாஸ்

"புரளி உலகம்" பத்திரிகையின் ஆசிரியருக்கு இன்னும் பைத்தியம் பிடிக்காமலிருந்தது அவர் நண்பர்களுக்கெல்லாம் பெரிய ஆச்சரியமாயிருந்தது. ஏனென்றால் அவர் சாதாரண விஷயங்களில் கூடக் குழப்பமடைந்து விடுவார். மானேஜரிடம் பேசுவதாக நினைத்துக் கொண்டு ஒரு குமாஸ்தாவிடம் பேசுவார். விளம்பர மானேஜரிடம் பேசுவதாக நினைத்துக் கொண்டு உதவி ஆசிரியரைத் திணற அடிப்பார்.

அன்று ஆசிரியர் வீட்டிலேயே உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தார். வெகு நேரம் கழித்து நிமிர்ந்து பார்த்தார். தமக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு ஒருவர் தம்மையே கவனிப்பதைக் கண்டதும் ஆசிரியர் எழுதுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்து அவரையே கவனித்தார்.

அந்த மனிதரும் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ஆசிரியரையே கவனிக்க ஆரம்பித்தார். ஆசிரியர், வந்தவரின் பிரகாசமான கண்களைக் கூர்ந்து நோக்கினார். அவரும் இவரது கண்களையே பார்த்தார். ஆசிரியர் ஒரு முறை கண்ணைச் சிமிட்டினார்; அவரும் கண்ணைச் சிமிட்டினார். ஆசிரியர் தம் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டார். அவரும் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டார்.

ஆசிரியர் ஒன்றும் புரியாமல் தலையைச் சொறிந்தார். அவரும் தலையைச் சொறிந்தார். ஆசிரியர் முகத்தைக் கையால் பொத்திக் கொண்டார்; அவரும் முகத்தைப் பொத்திக் கொண்டார். மெதுவாக விரல்களின் இடுக்கு வழியாகப் பார்த்தார் ஆசிரியர். இது என்ன அதிசயம்! அவரும் விரல்களின் இடுக்கு வழியாக ஆசிரியரையே பார்த்தார்.

ஆசிரியர் கோபத்துடன் எழுந்தார்; அவரும் எழுந்தார். ஆசிரியர் ஓங்கி குத்தாகக் குத்துவேன் என்று கைமுஷ்டியைக் காண்பித்தார். அவர் மட்டும் சும்மா இருந்து விடவில்லை. அவரும் காண்பித்தார்.

ஆசிரியருக்கு அவரைக் குத்திக் குமுக்கி விட வேண்டும் என்று தோன்றியது. உடனே அவர் மேஜையின் மேல் காகிதங்கள் பறக்காமலிருக்கும் பொருட்டு வைத்திருக்கும் கல்லை எடுத்தார். என்ன அநியாயம்! அவரும் அதேமாதிரி ஒரு கல்லை எடுத்தார்.

ஆசிரியரின் கல் வேகமாக அந்த ஆசாமியை நோக்கிப் பறந்தது.

என்ன சத்தம்! வெடி குண்டு விபத்தா? அடுத்த நிமிஷம் அறை முழுவதும் கண்ணாடித் துண்டுகள் சிதறின. ஆசிரியருக்கு முன்னாலிருந்த பீரோவில் பதித்திருந்த பெரிய நிலைக் கண்ணாடி சுக்கல் சுக்கலாக உடைந்து போய் விட்டது! அந்தப் பேர்வழியும் போய் விட்டார்!

வைத்ததைப் பற்றிக்கூட நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ஆனால் நான் பெரியவனாகிக் காலேஜுக்குப் போன பிறகு கூட என்னைப் பின் தொடர்ந்து நான் என்ன செய்கிறேன், என்ன பண்ணுகிறேன் என்று கவனித்துக் கொண்டே வந்தார்களே, அது நான் மிகவும் வருத்தமாயிருந்தது.

★ நான் பி. ஏ. பரீட்சையை எத்தனை தடவை முற்றுகை யிட்டால் இவர்களுக்கென்ன, கேட்கிறேன்! அப்படித்தான் முதல் வருஷத்திலேயே பரீட்சையில் தேறியிருந்தேன், எனக்கு யாராவது வேலை வைத்துக் கொண்டிருந்தார்களா, என்ன? பரீட்சையில் தேறினால் உடனே வேலை தேடவேண்டிய சிரமம் இருக்கிறது. அதற்கு, பரீட்சைக்குப் படிக்கும் சிரமம் மேல் என்பது எனக்கும் தெரியும், அந்த நான்கு பேருக்கும் தெரியும்.

அப்படியிருந்தும் அந்த நான்குபேர் சும்மா இருந்தார்களா என்ன? கிடையாது. எனக்குப் பெண் கொடுக்க முன் வந்த ஒவ்வொருவர் வீட்டுக்கும் சென்று, நான் அப்பொழுது எத்தனாவது தடவையாக பி. ஏ. பரீட்சைக்குச் சென்று கொண்டிருக்கிறேன் என்று வெகு அக்கரையாகத் தெரிவித்து விட்டுத் திரும்பினார்கள்.

இதனால் அந்த இடங்கள் எனக்குக் கிடைக்காமல் போய் விட்டனவே என்ற வருத்தம் கூட எனக்குக் கிடையாது. ஆனால் அப்படி அந்த நான்கு பேர் போய்ச் சொன்ன எல்லா இடங்களிலும் உள்ள பெண்கள் கிட்டத்தட்ட சரசுவின் சிநேகிதிகள். இன்றைக்கும், நாளைக்கும் நான் சரசுவை அழைத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் அந்தப் பெண்கள் என்னைப் பார்த்துக் கேலி செய்கிறார்கள். அவர்கள் பிள்ளையைப் பார்த்து நான் ஏதாவது வேடிக்கையாக, "என்னடா, மூன்றாம் கிளாஸா? இது எத்தனாம் தடவை?" என்று கேட்டால், "அவர் பி. ஏ. க்கு எத்தனை தடவை போனார் என்று கேளுடா" என்று பையனுக்குத் தாயார் சொல்லிக் கொடுக்கிறாள்!

என் கல்யாணத்தோடேயாவது இந்த நான்கு பேர் என்னைக் கைவிட்டுப் போய் விடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் என்னை விடுவதாயில்லை. நான் எப்படி குடித்தனம் பண்ணுகிறேன், எவ்வளவு பணம் சேர்த்துவைக்கிறேன், சரசுவுடன் என்றைக்குச் சண்டை போடுகிறேன் என்று இதை யெல்லாம் கூர்ந்து கவனித்து, அந்தந்தக் காரியத்துக்கு ஏற்றாற்போல் இகழவோ, புகழவோ செய்துகொண்டு தானிருக்கிறார்கள்.

★ இப்படி என் குடித்தனக் காரியங்களை ஒன்று விடாமல் கவனித்துக் கொண்டு வருகிற இவர்களுக்கு என் கட்டுரைகளையும் படிப்பதற்கு எப்பொழுது தான் சமயம் கிடைக்கிறதோ, தெரியவில்லை.

நான் எழுதுகிற கட்டுரைகள் எனக்குக்கூட மறந்து போய் விடுகின்றன. ஆனால் இந்த நான்கு பேர் வேறு வேலையின்றி அவற்றை யெல்லாம் கெட்டுருப் பண்ணி வைத்திருக்கிறார்கள். தங்களுக்கு நல்லது என்று பட்ட கட்டுரைகளை இன்னும் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குப் பிடிக்காத கட்டுரைகளை இன்னும் பழித்துக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், "சபாஷ்! பேஷ்!" என்று சொல்லும் போதெல்லாம் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் திரேதா யுகத்தில் எழுதின கட்டுரைகளைப் பற்றி இன்னும் நன்றாயில்லை யென்று இகழும்போது, இவர்கள் இகழலும் வேண்டாம், புகழலும் வேண்டாம் என்று தோன்றுகிறது.

அத்தனைக்கும் நான் கட்டுரைகள் எழுத உட்காரும்போதெல்லாம் இந்த நான்கு பேரை நான் மறந்துவிட்டாலும் என் நண்பர் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். "நன்றாக எழுதுங்கள். நான்கு பேர் பார்த்து மெச்சும்படி எழுதுங்கள்" என்று நச்சரித்துக்கொண்டேயிருக்கிறார்.

ஆனால் இந்தக் கட்டுரையைப் பற்றி அந்த நான்கு பேர் என்ன சொல்லப் போகிறார்கள் என்று நான் கவலைப்படப் போவதில்லை. எங்கள் ஆசிரியர் பார்த்து நன்றாயிருக்கிறது என்று சொல்லிவிட்ட பிறகு, யார் என்ன சொன்னால் என்ன?



அல்லது பெண்ணா?

அந்த நாலு பேர்

நாடோடி

★

★ "இது என்ன புடவை என்று வாங்கிக் கொண்டு வந்திருக்கேன்? இதைக் கட்டிக் கொண்டால் நாலு பேர் பார்த்து 'ரப்பைக் காட்ட' மாட்டாளோ!" என்கிறாள் என் மனைவி.

"எந்தக் காரியம் பண்ணினாலும் சரி, நாலு பேர் பார்த்து மெச்சும்படியாக இருக்கவேண்டும், தெரிந்ததா?" என்று எனக்கு அடிக்கடி புத்தி கூறுகிறார் என் தகப்பனார்.

"அந்தப் பயலுக்கு இத்தனை ஆணவமா? நாலு பேரிடம் சொல்லி அவன் மானத்தை வாங்காவிட்டால், பாரும்" என்று அடிக்கடி 'அந்தப் பய'லைப் பற்றிப் பொருமுகிறார் அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர்.

★ இப்படி எல்லாரும் கண்டு நடுங்கும் அந்த நான்கு பேர் யார்? இவர்களைக் கண்டு ஏன் எல்லாரும் நடுங்குகிறார்கள்? இவர்கள் ஏன் நான் என் மனைவிக்குப் புடவை வாங்கிக் கொண்டு வரும்போதெல்லாம் என்னைப் பார்த்து ரப்பைக் காட்டுகிறார்கள்? இவர்கள் மெச்சும்படி நான் எதற்காகக் காரியங்கள் செய்ய வேண்டும்? இவர்கள் யார் என் காரியங்களைப் பார்த்து மெச்சுவதற்கு? அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் 'அந்தப் பய'லின் மானத்தை வாங்க விரும்பும்போதெல்லாம் இவர்கள் எதற்காக அவருக்கு உடந்தையாகப் பக்கத்தில் வந்து நிற்கிறார்கள்?.......என்று இப்படியெல்லாம் எனக்கு அடிக்கடி தோன்றுவது உண்டு.



அந்த நான்கு பேர் ஆணா......

★ வெகு நாளாகவே இந்த நான்கு பேர் யார் என்று தெரிந்துகொள்ள எனக்கு மிகவும் ஆவல்.

பிறர் காரியங்களைப் பார்த்து மெச்சுவதையோ அல்லது பழிப்பதையோ தவிர இவர்களுக்கு உலகில் வேறு ஒரு காரியமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நான்கு பேர் ஆணா, பெண்ணா என்றுகூடத் தெரியவில்லை. எனக்கு என்னமோ, இவர்கள் பெண்ணாய்த்தான் இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆண்களாயிருந்தால் இப்படி அநாவசியமாகப் பிறர் காரியங்களில் தலையிடுவார்களா?

நான் சிறு வயதில் பாடம் படிக்காமல், பள்ளிக்கூடமும் போகாமல் தத்தாரியாய் அலைந்து கொண்டிருந்தேன். இது விஷயத்தைப் பற்றி என் பெற்றோர்கள் கூட அதிகம் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் நான் இப்படி அலைந்தது இந்த நான்கு பேருக்குப் பிடிக்கவில்லை. உடனே குடுகுடுவென்று என் தாயாரிடம் போனார்கள். "உங்கள் பிள்ளை இப்படித் தத்தாரியாகத் திரிகிறானே! நான்கு பேர் பார்த்து சிரிக்கிறார்களே! அவனைச் சற்றுக் கண்டித்து வைக்கக் கூடாதா?" என்றார்கள்.

அவர்கள் நான்கு பேர் என்று குறிப்பிட்டது தங்களைத்தான். ஆனால், "நாங்கள்தான் உங்கள் பிள்ளையைப் பார்த்துச் சிரித்தோம்" என்று சொன்னால், என் தாயார் தடியை எடுத்துக் கொண்டு அவர்கள் முதுகில் வாங்கி விடுவாள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவேதான் வெகு சாதுரியமாக, வேறு யாரோ நான்கு பேர் பார்த்துச் சிரித்ததுபோல் சொல்லி வைத்தார்கள். அவர்கள் அத்தனை சாதுரியமாக நடந்து கொள்ளவே, அவர்கள் முதுகில் விழ வேண்டிய அடி என் முதுகில் விழுந்து விட்டது!

பள்ளிக்கூட நாட்களில் அவர்கள் அடிக்கடி என்னைப் பற்றி என் பெற்றோர்களிடம் சொல்லி, அடி வாங்கி

சித்ரலேகையும் அவ்விதமே யோசனை செய்தாள்.

"பாலகோபால் எனக்காகப் பதினாயிரம் ரூபாய் கொடுத்தல்லவா வைர அட்டிகை வாங்கி வந்திருக்கிறார்? அவர் எவ்வளவு பெரிய பணக்காரராயிருக்க வேண்டும்? அவர் வாங்கிக் கொடுத்த அட்டிகையை விற்றாலல்லவா இத்தனை நாள் கஷ்டமின்றி ஜீவிக்க முடிந்தது? எனக்கென்று அப்பா இந்த வீட்டைத் தவிர வேறு ஒரு சொத்தும் வைத்துவிட்டுப் போகவில்லையே? அப்படியிருக்க சுக ஜீவனம் செய்ய வேறு வழிதான் என்ன இருக்கிறது? கங்காதரனை மணந்துகொண்டு கஷ்டப்பட என்னால் முடியாது; பாலகோபாலனை மணந்துகொள்ள வேண்டியது தான்" என்று முடிவு செய்தாள் சித்ரலேகை.

உடனே பாலகோபாலனைப் போய்ப் பார்ப்பதற்குக் கிளம்பினாள்.

வேதனையுடன் உட்கார்ந்து பலவாறு யோசித்துக் கொண்டிருந்த பாலகோபாலனுக்குச் சித்ரலேகையைக் கண்டதும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

சித்ரலேகையின் முகம் வாடியிருந்ததைக் கண்ட பாலகோபால் அதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தார். சித்ரலேகை, "நீங்கள் எனக்குக் கொடுத்த வைர அட்டிகைதான்" என்றாள்.

"என்ன, வைர அட்டிகையா?" என்று கேட்டுவிட்டுப் பாலகோபால் கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தார். அவர் அப்படிச் சிரித்ததின் அர்த்தம் தெரியாமல் சித்ரலேகை விழித்தபோது, "அது தொலைந்து போய்விட்டதா? போனால் போகட்டும்; இந்த அற்ப விஷயத்துக்காக நீ வருந்தவே வேண்டாம்" என்றார் பாலகோபால்.

"ரூபாய் பத்தாயிரம்கொடுத்தல்லவா அதை வாங்கினீர்கள்?"

"சித்ரலேகா! உன் அழகுக்கும் ரூபத்துக்கும் அதைப்போல் ஆயிரம் அட்டிகை வேண்டுமானாலும் வாங்கித் தருவேன். நீ மட்டும்......"

சித்ரலேகை ஒரு கணம் யோசித்தாள். பிறகு "என் மனம் மாறிவிட்டது. தங்களுடைய தாராள மனத்தையும் தர்ம சிந்தனையையும் கண்டு தங்களையே மணப்பதென்று முடிவு செய்து விட்டேன்" என்றாள்.

பாலகோபால் பரம ஆச்சரியத்துடன் அவளை உற்றுப் பார்த்தார். சித்ரலேகை சொன்ன வார்த்தையை அவரால் நம்ப முடியவே இல்லை.

"நிஜமாகவா, சித்ரலேகை?"

"ஆமாம்; நிஜமாகத்தான் சொல்கிறேன். அந்தத் தரித்திரம் பிடித்த கங்காதரனை நான் மணக்கப் போவதில்லை. என்னுடைய செலவுக்கும் அவருடைய கருமித் தனத்துக்கும் கட்டி வராது" என்றாள் சித்ரலேகை.

பாலகோபாலனுக்குச் சித்ரலேகை சொன்ன வார்த்தைகள் சரியாய்க் காதில் விழவில்லை. அதற்குள் அவருடைய மனம் குழம்பிப் போய்விட்டது.

"ஐயோ! சித்ரலேகையின் மனத்தை மாற்றுவதற்காகக் கையிலிருந்த பணமெல்லாம் தான தர்மங்கள் செய்வதிலும் டாம்பீகச் செலவிலும் தீர்த்து விட்டோமே! இதை இப்போது சித்ரலேகையிடம் சொன்னால் என்ன சொல்வாளோ?" என்று பாலகோபால் தவியாய்த் தவித்தார்.

அப்புறம் சித்ரலேகைக்கும் தனக்கும் விவாகம் ஆகிறவரையில் அவர் இந்த விஷயத்தை அவளிடம் வெளியிடவே இல்லை!



★

புதுத் தைலம்

கணவன் :— அது என்ன, புதுத் தைலம்? உன் அலமாரியிலிருந்தது: கொஞ்சம் தடவி வாரிண்டேன். தலை மயிர் ரொம்ப நன்னாப் படிஞ்சிருக்கே!

மனைவி :— ஐயையோ! அது கோந்துப் புட்டியன்னா!

★


அதையெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. மேலும் மேலும் அவருடைய தர்மத்தைப் பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகிக் கொண்டே இருந்தன.

ஒருநாள் பாலகோபால் சித்ரலேகைக்காக வைர அட்டிகை ஒன்று வாங்கி வந்தார். கண்ணைப் பறிக்கும் அந்த வைர நகைக்கு எத்தனை விலை கொடுத்தாரோ தெரியாது. ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ராணிகளும் அதை அணிந்து கொள்ள ஆசைப்படுவார்கள் என்பது மட்டும் நிச்சயம். பாலகோபால் அந்த வைர அட்டிகையுடன் சித்ரலேகையிடம் சென்றார்.

பாலகோபாலனைக் கண்டதும் சித்ரலேகை புன்னகை பூத்த முகத்துடன் வரவேற்று உபசரித்தாள். எதிரிலிருந்த ஸோபாவில் யாரோ தனக்கு அறிமுகமில்லாத ஒருவன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த பாலகோபாலனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது. இதற்குள் சித்ரலேகை, "இவர் என்னுடைய பள்ளிக்கூடத் தோழர்; சீமையில் நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம். இவர் பெயர் கங்காதரன்" என்று அறிமுகப் படுத்தினாள். பாலகோபாலனும் கங்காதரனும் விளக்கெண்ணெய் சாப்பிட்ட மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பாலகோபால் சித்ரலேகையிடம் பேச முடியாமல் தவிப்பதைக் கண்ட அந்த வாலிபன் தானாகவே அவளிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியே சென்று விட்டான். பாலகோபால் பெருமூச்சு விட்டார். அப்புறம்தான் அவருக்கு வாயிலிருந்து பேச்சு வந்தது.

"சித்ரலேகா! நான் ஒரு வாரமாய் ஊரில் இல்லை. இதோ பார், இந்த



அட்டிகையை வாங்குவதற்காக எங்கெல்லாம் அலைந்து திரிந்தேன் என்கிறாய்?" என்று சொல்லிக் கொண்டே அட்டிகை வைத்திருந்த 'வெல்வெட்' பெட்டியை அவளிடம் நீட்டினார்.

பெட்டியைத் திறந்து பார்த்த சித்ரலேகையின் கண்கள் வைரம் போல் பிரகாசமடைந்தன. "ரொம்ப நன்றாயிருக்கிறது. இதை எனக்காகவா வாங்கி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்; உனக்காகவேதான். உன்னுடைய அழகுக்காக நான் இன்னும் எவ்வளவு நகை நட்டுகள் வேண்டுமானாலும் வாங்கித் தரத் தயாராயிருக்கிறேன்" என்றார் பாலகோபால்.

"நீங்கள் என்னை அளவுக்கு மீறிப் புகழ்கிறீர்கள். நான் அவ்வளவுக்கெல்லாம் அழகானவளில்லை. இந்த அட்டிகையை நான் எப்படிப் பெற்றுக் கொள்வது? நான் தங்களுக்குக் கலியாண விஷயமாய் எந்தவிதமான வாக்குறுதியும் கொடுக்கவில்லையே?"

"சித்ரலேகா! நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டேன் என்றாலும் பரவாயில்லை; இந்த ஆபரணத்தை உனக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்" என்றார் பாலகோபால்.

"அப்படியானால் சரி" என்று அட்டிகையை வாங்கிக் கொண்டாள் சித்ரலேகை.

பாலகோபால் சந்தோஷத்தால் மனம் நிரம்பியவராய் வெளியே வந்தார்.

●

சித்ரலேகை தன்னை மணக்க முடியாது என்று மறுபடியும் சொல்லியும் கூட பாலகோபாலனின் நம்பிக்கை சிதைந்து போகவில்லை. எப்படியும் அவளிடம், தான் நயமான குணம் படைத்தவன் என்று பெயரெடுத்து விட வேண்டும் என்ற ஒரே திட அபிப்பிராயத்துடன் இருந்தார். ஆனால் கங்காதரனைப் பற்றி மட்டும் அவருக்கு அடிக்கடி நினைவு வந்தது. அவனிடம் பணம் காசு ஒன்றும் கிடையாதென்று மட்டும் அவனைப் பார்த்தபோதே தெரிந்து விட்டது. பணமில்லாதவனைச் சித்ரலேகை மதிக்கமாட்டாள் என்பது மட்டும் நிச்சயம். அவளேதான் சொல்லியிருக்கிறாளே, தான் டாம்பீகச் செலவு செய்பவன் என்று. அப்படிப்பட்டவள் கங்காதரனை மணந்து கொண்டு எப்படிக் காலம் தள்ள முடியும் என்று பாலகோபால் யோசித்தார்.

'எஸ்டேட்'டுக்கே அதிபதி ஆகிவிட்டார். சோலகிரிக்கு அடுத்த மலைப் பிரதேசத்தில் அவருக்கு பிரம்மாண்டமான தேயிலை 'எஸ்டேட்' ஒன்று இருந்தது. யுத்தத்தின் காரணமாக சர்க்கார் இப்போது அந்த இடத்தை அழித்து விமான நிலையமாக ஆக்கிவிட்டார்கள். அதற்காகப் பாலகோபாலனுக்குப் பல லக்ஷ ரூபாய்களை சர்க்கார் விலையாகக் கொடுத்து விட்டனர். பாலகோபாலனும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது போதுமென்று மொத்தமாகத் தமக்குக் கிடைத்த பணத்தை வைத்துக் கொண்டு சௌக்கியமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். அவரைப் போல் அந்தப் பிராந்தியத்தில் தேயிலைத் தோட்டம் வைத்துப் பணம் சம்பாதித்த பேர்வழிகள் வேறு யாருமே இல்லையாகையால் ஊரார் எல்லோரும் அவரைத் 'தேயிலை ராஜா' என்றே அழைக்கத் தொடங்கினார்கள். ஆனால் தேயிலை ராஜாவைத் தெரிந்த பேர்களுக்கெல்லாம் அவர் ஒரு லோபி என்றும் தெரிந்திருந்தது. பிச்சைக்காரர்களோ, யாசகர்களோ அவரிடம் போய் ஒரு மணி தானியமோ அல்லது ஒரு செல்லாக் காசோ வாங்கி அறியார்கள். இதனால் அவரைச் சில பேர் 'கருமி ராஜா' என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் அப்படிப்பட்ட கருமி ராஜா சித்ரலேகைக்காக எதையும் செய்யத் தயாராயிருந்தார்.

பாலகோபால் மறுதினமே சித்ரலேகையைப் பார்க்க அவள் வீட்டைத் தேடிச் சென்றார். அதிருஷ்டவசமாய் சித்ரலேகை அப்போது தனியாக சோபாவில் சாய்ந்து புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அதுதான் சமயமென்று பாலகோபால் தன்னைப் பற்றியும் தன்னுடைய அந்தரங்கமான அபிப்பிராயத்தைப் பற்றியும் அவளிடம் ஒளிவு மறைவு இன்றித் தெரிவித்துக் கொண்டார்.

சித்ரலேகை ஏற்கனவே பாலகோபாலைப் பற்றியும் அவருடைய யோக்யதையைப் பற்றியும் அறிந்து வைத்திருந்தாள். எனவே, அவள் "நான் சீமைக்குப் போய் வந்தவள். என்னால் சிக்கனமாயிருக்க முடியாது. டாம்பீகச் செலவுகள் எனக்கு அதிகம். உங்களுடைய பணம் அநியாயமாய்க் கரைந்து போகும். நீங்களோ பாவம், ரொம்பவும் செட்டாயிருக்கிறீர்கள்......" என்று ஆரம்பித்தாள்.

"சித்ரலேகா! உனக்காக நான் என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையுமே கொடுக்கத் தயாராயிருக்கும்போது, பணந்தானா ஒரு பிரமாதம்? என்னைப் பற்றிப் பல பேர் பலவிதமாய்ச் சொல்லியிருப்பார்கள். அதையெல்லாம் நீ நிஜமென்று நம்பிவிடாதே. நான் சொன்ன தவ்வளவும் நிஜமென்பதை நிரூபித்துக் காட்டுகிறேனா இல்லையா என்பதைப் பார்" என்று சொல்லி விட்டுப் பாலகோபால் வேகமாய் நடந்து வெளியே போய் விட்டார்.

●

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, பாலகோபால் பணத்தை ஒரு பொருட்டாக நினைக்காமல் தானதர்மங்கள் செய்யத் தொடங்கினார். யார் வந்து எதைக் கேட்டாலும் சரிதான்; இல்லையென்று சொல்லாத வள்ளலாக ஆனார். "கோயில் கட்ட வேண்டுமா? இந்தாருங்கள் பணம்! ஏழைகளுக்கு அன்னதானமா? இதோ இருக்கிறது அரிசி மூட்டை. அனாதை ஆசிரமம் கட்ட வேண்டுமா? ரொம்ப நல்ல காரியமாயிற்றே; பிடியுங்கள் 'நோட்'டை! கோ சம்ரக்ஷண சங்கமா? இந்தாருங்கள் 'செக்!'" என்று கேட்டதற்கெல்லாம் பணத்தை எடுத்து வீச ஆரம்பித்தார். திடீரென்று இப்படி பாலகோபாலனுக்குத் தர்ம சிந்தனை ஏற்பட்டு விட்டதைக் குறித்து ஊரில் பேச்சு வளர ஆரம்பித்தது. எந்தக் காரியத்துக்கும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்த சிலபேர்வழிகள், பாலகோபாலனுடைய தர்மத்துக்கும் ஏதோ மறைமுகமான காரணம் இருக்க வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள். பாலகோபால்



கலியுகக் கர்ணன்

சாவி

தேவர்களும், அசுரர்களும் தபஸ்விகளும் பெண்ணாசைக்கு ஆளாகியிருக்கும்போது, கேவலம் நமது பாலகோபால் மட்டும் அந்த ஆசையிலிருந்து தப்ப முடியுமா? ஒரு நாள் அவர் ஸினிமாவுக்குப் போய்விட்டு வந்தார். படம் முடிந்து வெளியே வந்த போது ஒரு பிச்சைக்காரன் அவரைப் பார்த்துக் கையை நீட்டினான். பாலகோபால் அவனை லட்சியம் செய்யவில்லை. உதாசீனமாகத் தன்னுடைய கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தார்.

அதே சமயத்தில் ஸ்திரீகள் வகுப்பிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த சித்ரலேகை இதைப் பார்த்து விட்டு, பாலகோபாலனின் கருமித்தனத்தை நினைத்து யோசித்துக் கொண்டே சென்றாள்.

அவளைப் பார்த்துவிட்ட பாலகோபால் தம்முடைய செய்கையைக் குறித்துப் பெரிதும் வருந்தினார். "அடாடா! இந்தச் சமயத்தில் இவள் வருவாள் என்று தெரிந்திருந்தால் பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாயல்லவா போட்டிருப்பேன்?" என்று தம்மைத் தாமே நொந்து கொண்டார்.

ஸினிமாக் கொட்டகையிலிருந்து வந்த அந்தப் பெண்ணினுடைய அழகில் அவர் தம்முடைய மனதை ஏற்கனவே பறிகொடுத்து விட்டிருந்ததுதான் அதற்குக் காரணம்.

●

பாலகோபால் வசித்து வந்த தெருவின் கோடியில் வெகு காலமாக ஒரு வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. அதைச் சாதாரண வீடு என்று சொல்ல முடியாது. ஏறக்குறைய ஓர் அரண்மனையைப் போலவே இருந்தது. பாலகோபால் அந்த வீட்டை விலைக்கு வாங்குவதற்காக அதன் சொந்தக்காரர் யார் என்பதைப் பற்றிப் புலன் விசாரித்துக் கொண்டிருந்தார். அப்படி விசாரித்ததில், அது ஒரு ஸப் கலெக்டர் வீடு என்றும், அவர் வெளியூரில் உத்தியோகம் செய்து கொண்டிருப்பதால் வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார் என்றும், அவருடைய ஒரே பெண் சித்ரலேகை என்பவளைச் சீமைக்குப் படிக்க அனுப்பியிருக்கிறார் என்றும் விவரம் தெரிந்து கொண்டார்.

ஒருநாள் அந்தக் கலெக்டர் வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து ஸப் கலெக்டர் பெண் சித்ரலேகையும் வயதான ஒரு ஸ்திரீயும் வந்து இறங்கினார்கள். அவள் சீமையில் படித்துக் கொண்டிருக்கும்போதே அவளுடைய தகப்பனாரும் தாயாரும் இறந்து போனார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு சித்ரலேகைக்குச் சீமையில் இருப்புக் கொள்ளவில்லை. அடுத்த கப்பலிலேயே ஏறி ஊருக்குப் பிரயாணமானாள். நேராகத் தன் அத்தை வீட்டைத் தேடிச் சென்று கையோடு அவளையும் அழைத்துக் கொண்டு, தனக்கு அப்பா வைத்துவிட்டுப்போன வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அன்றைக்குத்தான் பாலகோபாலனும் அவளை முதல்தடவையாகப் பார்த்தது. அப்போதே அவளுடைய அழகில் தம்முடைய மனதைப் பறிகொடுத்துவிட்ட பாலகோபால், சாப்பிடுகிற வேளையில் தூங்கிக் கொண்டும் தூங்குகிற வேளையில் சாப்பிட்டுக் கொண்டுமிருந்தார். "அவளை மறுபடியும் எப்படிப் பார்ப்பது? எங்கே சந்திப்பது? எவ்விதம் பேசுவது?" என்றெல்லாம் அது முதல் மூன்று மாத காலமாய் ஒரே ஏக்கம் பிடித்துக் கிடந்தார். பிறகு மறுபடியும் அவள் தன்னைப் பார்க்கும் போது தானா இந்தச் சோம்பேறிப் பிச்சைக்காரன் கையை நீட்டித் தன்னுடைய கருமித்தனத்தை வெளிப்படுத்த வேண்டும்?

சித்ரலேகையை நாளைக்கே சந்தித்து அவளுடன் ஒரு மணி நேரமாவது பேசித் தன்னுடைய மனோபீஷ்டத்தைத் தெரிவித்து விடுவது என்று தீர்மானித்தார் பாலகோபால்.

பாலகோபாலனுக்கு ஸ்திரீகளின் குணாதிசயங்கள் ஒன்றும் தெரியாது. அவருக்குப் பணம் சம்பாதிக்கத்தான் தெரியும். அவர் தம்முடைய பதினைந்தாவது வயதிலேயே வேலை செய்ய ஆரம்பித்தார். இப்போது வயது முப்பது கூட ஆகவில்லை. இதற்குள் ஒரு பெரிய



அரைக்கீரை விதைத் தைலம்

அரைக்கீரை விதையுடன் 72-வித சரக்குகளும் அநேக பச்சிலைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. இத் தைலத்தை வாரம் இரு முறை தேய்த்து ஸ்நானம் செய்து வர சிரசைப் பற்றிய சகல வியாதிகளைப் போக்குவதுடன் கண் எரிச்சல், கண் மறைப்பு முதலிய கண் சம்பந்தமான வியாதிகளையும், காது குத்தல், காதில் சீழ் வருதல் முதலிய வியாதிகளையும் கண்டிக்கக் கூடியது.

●

கோகுல் சோப்

(மிருகக் கொழுப்பற்றது)

ஆடைகளை தூய வெண்மையாக்குவதில் நிகரற்றது.

பெரிய பார்களாகவும் சிறு கட்டிகளாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

●

தயாரிப்பவர்கள் :

டி.எஸ்.ஆர். அண்டு கோ. கும்பகோணம்

மதராஸ் லோகல் ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைக்ராப்ட்ஸ் ரோடு — திருவல்லிக்கேணி

●

பாலக்காட்டுக்கு லோகல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்



கொண்டே தின்பண்டங்கள் செய்யும் அறைக்கு ஓடிற்று.

அங்கே அடுப்பில் இருந்த நெருப்புத் துண்டுகளை அது விழுங்க ஆரம்பித்தது. அங்கிருந்தவர்கள் நெருப்புக் கோழியைத் தடி கொண்டு விரட்டினார்கள். நெருப்புக் கோழி பயந்து வெளியே ஓடிவந்தது. அதைப் பார்த்த நாய் "நல்ல இட்லியையும், தோசையையும் விட்டுவிட்டு நெருப்பையா தின்பார்கள்? அட அசடே!" என்று பரிகாசம் செய்தது.

ஆனால் நெருப்புக் கோழியின் சிநேகமும் நாயின் சிநேகமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்தது. ஒரு நாள் இரவு வெளியில் போய் ஏதாவது ஆகாரம் சம்பாதிக்கலாம் என்று இரண்டும் நிச்சயித்தன. அன்று பௌர்ணமி ஆதலால் நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. அன்று முழுவதும் ஆகாரம் கிடைக்காததினால் நாயுக்கும் நெருப்புக் கோழிக்கும் பசி அதிகரித்தது. "பிச்சை எடுத்துக் கொண்டு வந்தாவது சாப்பிடலாம், வா" என்றது நெருப்புக் கோழி. "அது சரி. ஆனால், எப்படிப் பிச்சை கேட்பது?" என்றது நாய். "இதென்ன பிரமாதம்! நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து ஏதாவது பாடிக்கொண்டு போனால் யாராவது கொஞ்சம் சோறு போட மாட்டார்களா?" என்றது நெருப்புக் கோழி.

உடனே நாயும், நெருப்புக் கோழியும் பாடிக் கொண்டே தெருவில் சென்றன. இரண்டும் சேர்ந்து நள்ளிரவில் நிசப்தமாக இருக்கும் போது பாடினால் பிறருக்கு எப்படி இருக்கும்?

அப்பொழுது, ஒரே சமயத்தில் பல வீடுகளிலிருந்து "சீ, சீ, போ!" என்று பல குரல்கள் கிளம்பின. நாயின் பக்கத்தில் ஓடு கண்ணாடித் துண்டுகளும், ஆணிகளும், இரும்புத் துண்டுகளும் வந்து விழுந்தன. ஜனங்கள் விட்டெறிந்த சாமான்கள் நாயின் மீது விழவே அது கத்திக்கொண்டே பதுங்கிற்று. அப்பொழுது நெருப்புக் கோழி என்ன செய்தது தெரியுமா? சந்தோஷத்தினால் சிறகை அடித்துக் கொண்டது. கண்ணாடித் துண்டுகளையும் ஆணிகளையும் அவசரம் அவசரமாக அது விழுங்கிற்று. "நாயாரே! என்ன பேசாமலிருக்கிறீர்கள்? அழகான இந்த வஸ்துக்களை நீங்களும் என்னைப் போல் சாப்பிட்டுப் பசியைத் தணித்துக் கொள்ளுங்களேன்" என்றது நெருப்புக் கோழி.

"இவைகளைச் சாப்பிட எனக்குப் பழக்கமில்லை" என்று வெகு பரிதாபத்துடன் நாய் பதில் சொல்லிற்று. "அடாடா! இவ்வளவு நல்ல சாமான்களைத் தின்ன உமக்குப் பழக்கமில்லை என்று சொல்லுவது ஆச்சரியமாக இருக்கிறதே" என்றது நெருப்புக் கோழி. நாய் அவமானத்தினால் தலை குனிந்து கொண்டது. அது முதல் நாய் கடவுளால் ஏற்பட்ட பிறருடைய பழக்க வழக்கங்களைப் பார்த்துப் பரிகாசம் செய்வதில்லை.





நாயும் நெருப்புக்கோழியும்

ராஜீ

ஒரு நாயும் ஒரு நெருப்புக் கோழியும் மிகவும் சிநேகமாக இருந்தன. வெளியில் உலாவப்போகும் போதெல்லாம் இரண்டும் சேர்ந்தாற் போலத் தான் போகும். தூங்கும் பொழுதும் ஒன்றாகத்தான் தூங்கும். சாப்பாட்டு நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களில் இரண்டும் ஒன்றாகத் தானிருக்கும். ஆனால் அவைகளின் பழக்க வழக்கங்கள் ஒன்றாக இராததினால் சில சமயத்தில் ஒன்றுக்கொன்று வெறுத்துக்கொள்ளும்படி நேரிடுவது வழக்கம்.

ஒரு சமயம் இரண்டும் மணலில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது யாரோ ஒரு வேடன் வருவதுபோலத் தோன்றியது. உடனே நாய் தைரியமாகக் குலைக்க ஆரம்பித்தது. ஆனால் நெருப்புக்கோழி பயந்து தனது தலையை மணலில் மறைத்துக் கொண்டது. அப்பொழுது நாய் நெருப்புக் கோழியைப் பார்த்து "ஏன் இப்படிப் பயப்படுகிறாய்?" என்று பரிகாசம் செய்தது. அதற்கு நெருப்புக்கோழி "குலைப்பது உன் வழக்கம். மணலில் தலையை மறைத்துக் கொள்வது என் வழக்கம்" என்று சொல்லிற்று.



நெருப்புக் கோழியும், நாயும் ஒரு நாள் வெளியில் உலாவச் சென்றது. வெகுதூரம் நடந்ததினால் அவைகளுக்குக் களைப்பு மேலிட்டது. பசியும் உண்டாயிற்று. அப்பொழுது ஒரு வீட்டில் "கஜேந்திரன் ஹோட்டல்" என்று ஒரு பலகையில் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது. அதைப் பார்த்த நாய் "வா வா! உள்ளே போய் ஏதாவது சாப்பிட்டுக் களைப்பாறலாம்" என்று நெருப்புக் கோழியை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றது. ஹோட்டலின் சொந்தக்கார யானை இவைகளை உபசரித்து உட்கார வைத்தது. உடனே நாய் தின்பண்டங்களைக் கொண்டுவரும்படி சொல்லவே, அவைகளுக்கு எதிரில் ஜிலேபி, இட்லி, தோசை, வடை முதலி பட்சணங்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

நாயின் எதிரில் வைத்திருந்த தட்டுகள் க்ஷிப்ரத்தில் காலி ஆயின. ஆனால் நெருப்புக் கோழியோ தின்பண்டங்களைத் தொடாமல் பேசாமல் உட்கார்ந்திருந்தது. "அடடா, தின்பண்டங்கள் எவ்வளவு நன்றாக இருக்கின்றன! கொஞ்சம் சாப்பிடேன்" என்று நாய் நெருப்புக் கோழியை உபசரித்தது. நெருப்புக் கோழி சற்றுக் கோபத்துடன் "இவைகள் எனக்குப் பிடிக்காது. சாப்பிட்டும் வழக்கமில்லை" என்று சொல்லிக்



காலக்ஷேபம்

பழக வேண்டும்!

மாஜிஸ்ட்ரேட் (திருடனைப் பார்த்து):— நீ பையில் வைத்திருந்த மணிபர்ஸை அவருக்குத் தெரியாமல் எப்படி எடுத்தாய்?

திருடன்:— அதெல்லாம் சொன்னா வராதுங்க. நாளா வட்டத்தில் பழக வேண்டும். —எம். பி. இரத்தினசாமி.

●

அட மறுஷா!

வேலைக்காரன் :— தங்களை வில்லி துரைசானியம்மா டெலிபோன்லே கூப்பிடறாங்க.

எஜமான் :—ஐயையோ! என் ஆபீஸர் மனைவின்னா? நான் சட்டைகூடப் போட்டுக் கொள்ளாமலிருக்கிறேனே! அடியே! நீ போய் டெலிபோனில் பேசு. நான் வெளியே போயிருக்கிறேனென்று சொல்! —வேதா.

●

அவர் நினைந்தது

ஒருவர் :—ஒரு ஆருடம் சொல்ல வேண்டும்: நான் நினைத்துக் கொண்டிருப்பது பலிக்குமா, பலிக்காதா?

ஜோஸ்யர் :—பலிக்காது!

ஒருவர் :—நான் நினைத்துக் கொண்டிருந்தது, நீங்கள் சொல்லப் போகும் ஜோஸ்யம் பலிக்குமா என்பதுதான்! —ஜி. சுவாமிநாதன்.

●

அசலூர்க்காரன்!

இருவர், "சூரிய வெளிச்சம் அதிகமா, சந்திர வெளிச்சம் அதிகமா" என்பதைப் பற்றிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழிப்போக்கன் ஒருவன் வந்தான். இவ்விருவரும் அவனைப் பார்த்து, "ஏன் ஐயா! சூரிய வெளிச்சம் அதிகமா? சந்திர வெளிச்சம் அதிகமா?" என்று கேட்டார்கள்.

வழிப்போக்கன் :— எனக்கென்னையா தெரியும்? நான் அசலூர்க்காரன்!

—கே. ஏ. வஹாப்.

அதிசயக் கணக்கு

இன்ஸ்பெக்டர் எலிமெண்டரி பள்ளிக்கூடத்திற்குச் சென்று இரண்டாம் வகுப்புக்குள் நுழைந்தார். அப்பொழுது அந்த வகுப்பில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது.

இன்ஸ்:— மூன்றணாவிற்கு நான்கு பழங்கள் என்றால் ஒரு பழம் என்ன விலை?

பையன்:—ஒரு பழம் சும்மா, ஸார்!

இன்ஸ்:—எப்படி?

பையன்:—நான்கு பழங்களின் விலை மூன்றணா; மூன்று பழங்களின் விலை இரண்டணா; இரண்டு பழங்களின் விலை ஓரணா; மீதி ஒரு பழம் சும்மா!

—டி. ஆர். மாதவன்.

●

அதுவும் இருந்தால்?

கனவான் :—தம்பி, ஏன் அழுகிறாய்?

பையன் :—காலணா காணாமற் போச்சு. அதனால்தான் அழுகிறேன்.

கனவான் :—போனால் போகிறது. இந்தா காலணா! அழாதே தம்பி!

—



பையன் காலணாவை வாங்கிக் கொண்ட பிறகும் அழுவதைக் கண்ட கனவான், "இன்னும் ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

பையன் :—"உம்ம்ம்ம்....... அந்தக் காலணாவும் இருந்தால் அரையணா ஆகுமே......மே.......மே......"

—ஆர். எஸ். மணி.

கேட்டு, மயூர சன்மனைக் கைப்பற்றிக் கொண்டு வருவதற்காக இன்னும் பல குதிரை வீரர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் அவர்களிடம் அவன் அகப்படவில்லை. கடைசியில், மயூர சன்மன் கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள ஸ்ரீ பர்வதத்தை அடைந்து, அங்கே மன்னி அடர்ந்த காட்டில் சிறிது காலம் பல்லவ வீரர்களுக்கு ஒளிந்து வாழ்ந்தான். கொஞ்ச காலத்தில் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மலை ஜாதியாரைக் கொண்டு ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டியது மல்லாமல் சுதந்திர ராஜ்யத்தையும் ஸ்தாபித்தான். பின்னர், அந்தப் பெரிய சைன்யத்துடனே, காஞ்சியில் தன் குருவுக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்கும் பொருட்டுப் புறப்பட்டு வந்தான். அந்த மயூர சன்மனின் சைன்யமும், காஞ்சி பல்லவ சைன்யமும் இப்போது புரசங்காடா யிருக்கும் இந்தப் பிரதேசத்திலே தான் சந்தித்தன. ஏழு நாட்கள் இடைவிடாமல் யுத்தம் நடந்தது. ஆயிரக்கணக்கான வீரர்கள் போரில் மாண்டார்கள். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி இந்த மலைப் பிரதேசத்தை யெல்லாம் நனைத்தது.

அப்படி இரத்தவெள்ளம் ஓடிய இடத்திலேதான் சில காலத்துக்குப் பிறகு இந்தப் புரசங்காடு முளைத்தது. அந்தப் பயங்கர யுத்தம் நடந்த அதே பங்குனி மாதத்தில் ஒவ்வொரு வருஷமும் புரச மரங்களின் இலை உதிர்ந்து இரத்தச் சிவப்பு நிறமுள்ள பூக்கள் புஷ்பிக்கின்றன. சித்திரை மாதத்தில் புஷ்பங்கள் வாடி உதிர்ந்து மறுபடி மரங்கள் தளிர்கள் விடுகின்றன. அந்தப் போரில் இறந்த ஆயிரக்கணக்கான வீரர்களின் ஆவிகள் இன்னமும் இங்கே உலாவிக் கொண்டிருப்பதாக அக்கம் பக்கத்து கிராமங்களின் ஜனங்கள் நம்புகிறார்கள். ஆவிக் குதிரைகளின்மீதேறிய ஆவி வீரர்கள் வாள்களையும் வேல்களையும் ஏந்தி 'ஹா ஹா' என்று கூவிக்கொண்டு இந்த நிர்ஜனப் பிரதேசத்தில் அலைவதாகவும், யாராவது பிரயாணிகள், தனி வழியே வந்தால் அவர்களைக் கொன்று இரத்தத்தைக் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்வதாகவும் ஜனங்கள் நம்புகிறார்கள்! இரவில் இந்தப் பிரதேசத்தில் கேட்கும் பல வகைக் கோர சப்தங்கள் அவர்களுடைய நம்பிக்கையை உறுதிப் படுத்துகின்றன.

* * *

மேற்படி வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த பரஞ்சோதிக்குக் கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த பயமும் போய் விட்டது. அங்கே ஆவிகள் அலைவது பற்றிய கதையெல்லாம் வெறும் மூட நம்பிக்கை என்ற உறுதி அவனுக்கு ஏற்படவே, முதலில் தான் சிறிது பீதியடைந்ததைப்பற்றி வெட்கமடைந்தான். ஆனால் அந்த வீரனும் அதே விதமான பீதிக்கு உள்ளாகியிருந்ததை நினைத்து ஆறுதல் பெற்றவனாய், "என்னைக் கண்டதும் இருநூற்றைம்பது வருஷத்துக்கு முந்தி செத்துப் போன வீரனின் பிசாசுதான் வந்து விட்டதென்று நினைத்து அப்படி உளறி யடித்துக் கொண்டு விழுந்தீரா?" என்று கூறி நகைத்தான்.

"அதற்கென்ன, நீ இப்போது சிரிப்பாய்! இரத்தமும் சதையுமுள்ள மனிதனோடு நான் சண்டை போடுவேன். வில் போர், வாள் போர், வேல் போர், மல் யுத்தம்—ஏது வேணுமானாலும் செய்வேன். ஆனால், ஆவி வடிவங்களோடு யார் போரிடமுடியும்?" என்று அவ்வீரன் சிறிது கடுமையான குரலில் கூறவே பரஞ்சோதி பேச்சை மாற்ற எண்ணி, "இருக்கட்டும், ஐயா! இங்கே நடந்த யுத்தத்தின் முடிவு என்ன ஆயிற்று? யாருக்கு வெற்றி கிடைத்தது?" என்று கேட்டான்.

"மயூர சன்மனுடைய சைனியத்தைப் போல் பல்லவ சைனியம் மூன்று மடங்கு பெரியது. ஆகையால், பல்லவ சைனியம்தான் ஜயித்தது. மயூர சன்மனை அவனுடைய தேகத்தில் முப்பத்தாறு காயங்களுடன் கைப்பற்றிப் பல்லவ மன்னன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள்!......"

"பிறகு......?" என்று மிக்க ஆவலுடன் கேட்டான் பரஞ்சோதி.

"பிறகு என்ன நடந்திருக்குமென்று நீதான் சொல்லேன், பார்க்கலாம்!" என்று அவ்வீரன் கூறிப் பரஞ்சோதியின் ஆவலை அதிகமாக்கினான்.

தது. ஆனால், உங்களுடைய பயம் நிஜமென்று எப்படி மாயமாயிற்று? சற்று முன்னால், 'பிசாசு! பிசாசு!' என்று அலறி விழுந்தவர், இப்போது பயப்படுவதாகத் தெரிய வில்லையே!"

"ஆஹா! அது தெரியாதா உனக்கு? ஒருவன் தனி மனிதனாயிருக்கும் வரையில் ஒரு பிசாசுக்குக்கூட ஈடு கொடுக்க முடியாது. தனி மனிதனைப் பிசாசு அறைந்து கொன்று விடும். ஆனால் இரண்டு மனிதர்கள் சேர்ந்து விட்டால், இருநூறு பிசாசுகளை விரட்டியடித்து விடலாம்! இந்த மலைப் பிரதேசத்தில் இருநூறாயிரம் பிசாசுகள் இரா வேளைகளில் 'ஹா ஹா!' என்று அலறிக்கொண்டு அலைவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவு பிசாசுகளும் சேர்ந்து வந்தாலும், இரண்டு மனிதர்களை ஒன்றும் செய்ய முடியாது!"

பரஞ்சோதி சற்று மௌனமாய்ச் சிந்தித்தான். அந்த வீரனுடைய கூற்றில் உண்மை இருப்பதாகவே அவனுக்கும் தோன்றியது. அந்த வீரன் வந்து சேர்வதற்கு முன்னால் இன்னும் பகல் வெளிச்சம் இருந்தது என்றாலும், பரஞ்சோதிக்குப் பயமாயிருந்தது. இப்போது நாலாபுறமும் கனமான அந்தகாரம் சூழ்ந்து, நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் ஒவ்வொரு அடியும் உற்றுப் பார்த்துப் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தும் அவன் மனதில் பீதியில்லை. நரிகளின் கோரமான ஊளையிடுவதினால் ஏற்பட்ட பயங்கரங்கூட ஒரு கணத்துக்கு மேல் நிலைத்து நிற்கவில்லை.

சற்றுப் பொறுத்து, "இந்தப் பிரதேசத்தைப் பற்றி ஏதோ கதை இருப்பதாகச் சொன்னீர்களே, அது என்ன?" என்று கேட்டான் பரஞ்சோதி.

"கதை என்றால், கற்பனைக் கதை அல்ல; உண்மையான வரலாறு. சற்றுப் பயங்கரமாக இருக்கும். கேட்பதற்கு உனக்குப் பயமில்லை யல்லவா?"

"இல்லை; சொல்லுங்கள்."

அதன்மேல் அந்த வீரன் சொல்லிய வரலாறு பின் வருமாறு:—

ஏறக்குறைய இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் வட தேசத்திலிருந்து வீர சன்மன் என்னும் பிராமணன் தன்னுடைய சீடனாகிய மயூர சன்மன் என்னும் சிறுவனுடன் காஞ்சிமா நகருக்கு வந்தான். அவ்விருவரும் ஏற்கெனவே வேத சாஸ்திரங்களில் மிக்க பாண்டித்யம் உள்ளவர்கள். ஆயினும் காஞ்சிமா நகரின் ஸம்ஸ்கிருத கடிகை (சர்வகலாசாலை) யைச் சேர்ந்த மகா பண்டிதர்களால் ஒருவருடைய பாண்டித்யம் ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகுதான் அந்தக் காலத்தில் வித்தை பூர்த்தியானதாகக் கருதப்பட்டது. அதற்காகத்தான் வீர சன்மனும் மயூர சன்மனும் காஞ்சிக்கு வந்தார்கள். வந்து, காஞ்சி கடிகையில் சேர்ந்து மேலும் அவர்கள் தங்களுடைய வித்தையை விருத்தி செய்து கொண்டிருக்கையில், ஒரு நாள் அவர்கள் காஞ்சியின் இராஜ வீதி ஒன்றில் போய்க் கொண்டிருந்தபோது, பல்லவ மன்னனின் குதிரை வீரர்கள் சிலர் அவ் வீதி வழியே வந்தார்கள். வீதியில் நடந்த வண்ணம் ஏதோ ஒரு முக்கியமான சர்ச்சையில் ஈடுபட்டிருந்த குருவும் சிஷ்யனும் குதிரை வீரர்களுக்கு இடங் கொடுத்து விலகிக் கொள்ளவில்லை. இதனால் கோபங் கொண்ட குதிரை வீரன் ஒருவன் குதிரை மேலிருந்தபடியே வீர சன்மனைக் காலால் உதைத்துத் தள்ளினான். குருவுக்கு இத்தகைய அவமானம் நேர்ந்ததைக் கண்டு சகியாத சிஷ்யன் அந்த வீரன் கையிலிருந்த வாளைப் பிடுங்கி வீசவே அவன் வெட்டுப்பட்டுக் கீழே விழுந்தான். நடந்த சம்பவங்களை கண்டு அறியாத மற்றக் குதிரை வீரர்கள் மயூர சன்மனைப் பிடிக்க வந்தார்கள். அவர்களிடம் அகப்பட்டால் தன் உயிருக்கு ஆபத்துத்தான் என்பதை அறிந்த மயூர சன்மன் வீராவேசம் கொண்டு கையில் பிடித்த வாளுடன் அந்தக் குதிரை மீது தாவி ஏறித் தன்னைப் பிடிக்க வந்தவர்களை யெல்லாம் வெட்டி வீழ்த்திக் கொண்டு விரைந்து சென்று காஞ்சி நகரை விட்டு வெளியேறினான்.

பல்லவ ராஜ்யத்துக்கே அவமானம் விளைக்கத்தக்க இந்தக் காரியத்தைக்

"அஜந்தா வர்ண இரகசியத்தை அறிந்துகொள்ள ஆசை கொண்டவர்கள் ஆயனரைத் தவிர இன்னும் எவ்வளவோ பேர் உண்டு. அதற்காக அவர்கள் உயிர்க் கொலை செய்யவும் பின்வாங்க மாட்டார்கள். பல்லவ சக்கரவர்த்தியே சித்திரக் கலையில் ஆசை கொண்டவர். அஜந்தா இரகசியத்தைத் தான் முன்னால் அறிந்து கொள்வதற்காகச் சக்கரவர்த்தி என்ன வேணுமானாலும் செய்யப் பின்வாங்க மாட்டார். ஆயனரோ தன்னைத் தவிர வேறு யாருக்காவது முதலில் அந்த இரகசியம் தெரிந்துவிட்டால் பிராணனையே விட்டாலும் விட்டுவிடுவார். ஆகையினால்தான், சக்கரவர்த்தியிடம் அந்த விஷயத்தைத் தெரியப்படுத்திக் குதிரை கேட்பதற்கு ஆயனர் அவ்வளவு தூரம் தயங்கினார். எனவே, நீ போகும் காரியம் இன்னதென்பதைப் பரம இரகசியமாக வைத்துக் காப்பாற்ற வேண்டும். அதை உன்னிடமிருந்து தெரிந்து கொள்வதற்குப் பலர் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்யலாம். அதிலெல்லாம் நீ ஏமாந்துவிடக் கூடாது!......"

இவ்விதம் புத்த பிக்ஷு கூறியதைப் பரஞ்சோதி நினைவு கூர்ந்து ஒருவேளை தன் அருகில் அப்போது வந்துகொண்டிருப்பவன் அத்தகைய சூழ்ச்சிக்காரர்களில் ஒருவன்தானோ, தன்னைக் குதிரையிலிருந்து கீழே இழுத்துத் தள்ளிப் படாத பாடு படுத்தியதெல்லாம் ஒருவேளை பிக்ஷுவின் ஓலையைக் கவர்வதற்காகச் செய்த பிரயத்தனமோ என்று எண்ணமிட்டான். தன்னுடைய இடையைத் தொட்டுப் பார்த்து, ஓலை இடைக் கச்சுடன் பத்திரமாய்க் கட்டப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டு, அதைத் தன்னிடமிருந்து கைப்பற்றுவது எளிதில்லை என்று உணர்ந்து தைரியமடைந்தான்.

அப்போது சற்றுத் தூரத்தில் ஒரு நரி சோகமும் பயங்கரமும் நிறைந்த குரலில் ஊளையிடும் சத்தம் கேட்டது. அடுத்த நிமிஷத்தில் முறை வைப்பது போல் அநேக நரிகள் சேர்ந்தாற்போல் ஊளையிடும் சத்தம் கேட்கத் தொடங்கியபோது, பரஞ்சோதிக்கு ரோமம் சிலிர்த்துத் தேகமெல்லாம் வியர்த்தது.

அவ்விதம் அநேக நரிகள் ஏககாலத்தில் ஊளையிடும் சத்தமானது அந்த மலைக் காட்டுப் பிரதேசமெல்லாம் வியாபித்து, நாலாபுறத்திலும் சூழ்ந்திருந்த அந்தகாரத்தின் இடையே கரிய பெரிய பேய்களைப் போல் நின்ற குன்றுகளை அடைந்து முட்டி, அங்கிருந்து பிரதித்வனியாக மீண்டும் வந்துகொண்டிருந்தது. ஒரு கூட்டம் நரிகளின் ஊளை நின்றதும் இன்னொரு கூட்டம் ஊளையிட ஆரம்பித்தது. இவ்விதம் நரிகள் கோஷ்டி கோஷ்டியாக முறை வைத்து ஊளையிடும் சத்தமும், அந்த கோஷ்டி ஊளைச் சத்தமானது குன்றுகளில் மோதிப் பிரதிபலித்த எதிரொலியுமாகச் சேர்ந்து அந்தப் பிரதேசத்தையெல்லாம் விவரிக்க முடியாத பீதியும் பயங்கரமும் நிறைந்ததாகச் செய்தது.

இத்தனை நேரமும் மௌனமாய் வந்த வீரன் — "தம்பி! இப்பேர்ப்பட்ட காட்டு வழியில் நிலா இல்லாத முன்னிருட்டு நேரத்தில் தன்னந் தனியாக நீ புறப்பட்டு வந்தாயே. உன்னுடைய தைரியமே தைரியம்! எவ்வளவோ தடவை தனி வழியே பிரயாணம் செய்திருக்கும் எனக்கே இந்தப் பிரதேசத்தில் கதி கலக்கம் உண்டாகிவிட்டதே!" என்றான்.

அப்போது பரஞ்சோதி சிறிது தாக்கத்துடன், "ஐயா! என்னைக் கண்டதும் தாங்கள் 'பிசாசு!' 'பிசாசு!' என்று அலறிக்கொண்டு குதிரையிலிருந்து விழுந்தீர்களே? அது ஏன்? உண்மையாகவே பயப்பட்டீர்களா? அல்லது என்னைக் கீழே தள்ளுவதற்காக அப்படிப் பாசாங்கு செய்தீர்களா?......" என்று கேட்டான்.

"தம்பி! இந்தப் பிரதேசத்தின் சரித்திரத்தை அறிந்திருந்தால் நீ இந்தக் கேள்வி கேட்டிருக்கமாட்டாய். உன்னுடைய தைரியத்தின் காரணம் இன்னதென்று இப்போது எனக்குத் தெரிகிறது. அது உண்மையான தைரியமல்ல; அசட்டுத் தைரியம்!"

"ஐயா! தங்களிடம் உண்மையை ஒத்துக் கொள்கிறேன். சற்று முன்னால் தனியாக இந்த வழியில் வந்தபோது எனக்குச் சற்றுப் பயமாகத்தானிருந்

அவரிடம் தனக்கு ஏற்படாத பக்தியும் வாத்ஸல்யமும் தன்னைக் கீழே தள்ளி மேலே உட்கார்ந்த இந்த மனிதன் பேரில் உண்டாகக் காரணம் என்ன?

அதே சமயத்தில், அவன் கிளம்பும் போது புத்தபிக்ஷு கூறிய எச்சரிக்கை மொழிகளும் நினைவுக்கு வந்தன. "வழியில் சந்திக்கும் யாரையும் நம்பாதே! சத்துருவாய் நடித்தாலும் மித்திரனாய் நடித்தாலும் நீ போகுமிடத்தையாவது, ஓலை கொண்டு போகும் விஷயத்தையாவது சொல்லி விடாதே! உன் உயிருக்கே ஆபத்து வருவதா யிருந்தால் கூட, முதலில் ஓலையை யாரும் பார்க்க முடியாதபடி ஏரியில் குளத்தில் போட்டுவிட்டு அப்புறந்தான் உயிரை விடவேண்டும்" என்று புத்த பிக்ஷு கூறி அவ்விதமே தன்னிடம் சத்தியம் வாங்கிக் கொண்டதை அவன் நினைவு கூர்ந்தான். அவ்வளவு இரகசியத்தைக் கடைப்பிடிக்க வேண்டி யிருப்பதன் காரணத்தையும் பிக்ஷு விளக்கிக் கூறி யிருந்தார்:—



மகா வீரனுடைய சிநேகம் தனக்கு நிரந்தரமாகக் கிடைக்குமானால் அது எப்பேர்ப்பட்ட பாக்கியமா யிருக்கும்?

திருச்செங்காட்டாங்குடியிலிருந்து தான் காஞ்சிக்கு வந்தபோது வழியில் சிநேகமான புத்த பிக்ஷுவுக்கும் இந்த வீரனுக்கும் எவ்வளவு வித்தியாசம்? அந்த புத்த பிக்ஷுவானவர் தன்னைக் கீழே தள்ளவும் இல்லை; மார்பில் உட்கார்ந்து கழுத்தை நெரிக்கவும் இல்லை. ஆனாலும் அவரைக் கண்டாலே—ஏன், நினைத்தால் கூட,—பரஞ்சோதிக்கு நாவில் கசப்பும் மனதில் அருவருப்பும் உண்டாயின. காவித் துணி தரித்த அந்த சந்நியாசிக்கும், போர்க் கோலம் பூண்ட இந்த வீரனுக்கும் எவ்வளவு வித்தியாசம்? பிக்ஷு எவ்வளவோ தன்னிடம் அன்பாகப் பேசியிருந்தும், எவ்வளவோ ஒத்தாசை செய்திருந்தும்,



மட்டும் நிரூபித்து விடு. இதோ, இம் மாதிரி ரிஷப இலச்சினை உன்னிடம் இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே அவ் வீரன் இடது கையினால் தன் மடியிலிருந்து வட்ட வடிவமான ஒரு செப்புத் தகட்டை எடுத்துக் காட்டினான். பல்லவ சாம்ராஜ்யத்தில் பிரயாண அநுமதி பெற்ற இராஜ தூதர்களுக்கு அடையாளமாகக் கொடுக்கும் ரிஷப முத்திரை பதித்த தகடு அது.

பரஞ்சோதியும் வேண்டா வெறுப்புடன் தன் மடியிலிருந்த மேற்படி முத்திரைத் தகட்டை எடுத்துக் காட்டியதும், அவ் வீரன் பரஞ்சோதியின் கழுத்தை விட்டதோடல்லாமல், அவனைத் தூக்கி நிறுத்தி ஆர்வத்துடன் ஆலிங்கனம் செய்து கொண்டு, "தம்பி! என்னை மன்னித்து விடு! உன் முகக் களையைப் பார்த்தாலே சொல்லுகிறது, நீ கேவலம் சத்துருவின் ஒற்றனாயிருக்க முடியாதென்று. இருந்தாலும், இந்த யுத்த காலத்தில் யாரையும் நம்பி எந்தக் காரியமும் செய்வதற்கில்லை. முன் ஜாக்கிரதையாயில்லாவிட்டால், ஏமாந்து போவோம். நல்லது; குதிரை மேல் ஏறிக்கொள்; பேசிக்கொண்டே போகலாம்!" என்று கூறி அவ் வீரன் தன் குதிரையண்டை சென்று அதன் மேல் வெகு லாகவமாய்த் தாவி ஏறிக் கொண்டான்.

பரஞ்சோதியும் மௌனமாய், "இவனுடன் பேச்சு என்ன வேண்டிக் கிடந்தது? ஆ! இந்த மலைப்பாதை மட்டும் தாண்டட்டும். இவனை ஒரு கை பார்த்து இவனுக்குப் புத்தி கற்பிக்காமல் விடக் கூடாது" என்று எண்ணிக்கொண்டே தன் குதிரை மீது ஏறிக்கொண்டான்.

மாலை மங்கி இருளாகக் கனிந்து கொண்டிருந்த முன்னிரவு நேரத்தில், வானமெல்லாம் வயிரச் சுடர்களென மின்னத் தொடங்கியிருந்த நட்சத்திரங்களின் இலேசான வெளிச்சத்தில் இரு குதிரைகளும் சேர்ந்தாற் போல் போகத் தொடங்கின.

அத்தியாயம் 30

மயூர சன்மன்

அந்தக் காட்டுமலைப் பாதையில் சற்று நேரம் குதிரைகள் மெதுவாகக் காலடி வைக்கும் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் எதுவும் இல்லாமலிருந்தது.

பிரயாணிகள் இருவரும் மௌனத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

பரஞ்சோதியின் மனதில் என்னவெல்லாமோ எண்ணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

பெரிய மீசையுடனும், பிரம்மாண்டமான தலைப்பாகையுடனும் தன் பக்கத்தில் குதிரைமீது வரும் மனிதன் யாராயிருக்கும்? அவன் ஒரு மகா வீரன், போர் முறைகளில் கை தேர்ந்த நிபுணன் என்பதில் சந்தேகமில்லை. சற்று நேரத்துக்குள் தன்னை என்ன பாடு படுத்தி வைத்துவிட்டான்? சடக்கென்று குதிரைமேலிருந்து தன்னை அவன் இழுத்துக் கீழே தள்ளியதையும், மார்பின்மேல் ஒரு கண நேரம் மலைபோல் உட்கார்ந்திருந்ததையும், மறுபடியும் தான் எதிர்பாராத சமயத்தில் திடீரென்று கீழே தள்ளி இரும்புக் கையினால் தன் கழுத்தைப் பிடித்து நெரித்ததையும் நினைக்க நினைக்கப் பரஞ்சோதிக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கியது. அந்த ஆளைத் தன் கையிலுள்ள வேலை எறிந்து கொன்றுவிடலாமா என்று கூட எண்ணமுண்டாயிற்று. அதே சமயத்தில் மேற் கூறிய செயல்களில் அந்த வீரன் காட்டிய லாகவமும், தீரமும், சாமர்த்தியமும் அவனுக்கு அதிசயத்தை அளித்ததுடன் அந்த வீரன் பேரில் பயபக்தியையும் உண்டு பண்ணின. இன்னும் அந்த மனிதன் தன்னைக் கட்டி அணைத்துக் கொண்டதும், முதுகில் தட்டிக் கொடுத்து அருமை பாராட்டியதும், பால்யத்திலேயே தந்தையை இழந்தவனாகிய பரஞ்சோதியின் உள்ளத்தில் இது வரையில் அறிந்திராத பித்ரு வாத்ஸல்ய உணர்ச்சியைத் தூண்டி விட்டன. ஆஹா! இப்படிப்பட்ட ஒரு

கொண்டு, அவனுடைய தோள்களைப் பிடித்துப் பலமாகக் குலுக்கியது!

சற்று நிதானித்து மனதைத் தெளிவுபடுத்திக்கொண்டு சிந்தித்த பிறகு தான் பரஞ்சோதிக்கு நடந்தது என்னவென்பது புலனாயிற்று.

அதாவது, பரஞ்சோதி தன்னுடைய வேலின் நுனியினால் கீழே கிடந்தவனுடைய கையை மேலாகக் குத்தி, "விழுங்கி விடுவேன்!" என்று கத்திய உடனே, அந்த மனிதன் பரஞ்சோதியின் வேலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, இலேசாக ஓர் இழுப்பு இழுத்தான். அவ்வளவுதான், பரஞ்சோதி அவனுடைய குதிரைமேலிருந்து தடாலென்று தலை குப்புறக் கீழே விழுந்தான். உடனே, அந்த மனிதன் எழுந்து மின்னலைப் போல் பாய்ந்து வந்து பரஞ்சோதியின் மார்பின்மேல் உட்கார்ந்துகொண்டு, அவனுடைய தோள்களைப் பிடித்துக் குலுக்கியதுடன், "ஹா ஹா ஹா! நீ பிசாசு இல்லை; மனுஷன்தான்! பிசாசு மாதிரி கத்தி என்னைப் பயமுறுத்தப் பார்த்தாயல்லவா? நல்ல வேடிக்கை! ஹா ஹா ஹா!" என்று உரத்த குரலில் சிரித்துக்கொண்டே கூவினான். பிறகு, பரஞ்சோதியின் மார்பின் மேலிருந்து அவன் இறங்கி எழுந்து நின்று, பரஞ்சோதியையும் தரையிலிருந்து தூக்கி நிறுத்தி, "தம்பி! இந்த ஸ்மசான பூமியில் ஒண்டியாகப் போக வேண்டுமே என்று பயந்துகொண்டிருந்தேன். நல்ல வேளையாய் வழித் துணைக்குக் கிடைத்தாய். நீ எங்கே போகிறாய், தம்பி?" என்று ரொம்பவும் பழக்கமானவனைப் போல் தோளின் மேல் கையைப் போட்டுக் கொண்டு சல்லாபமாகக் கேட்டான்.

பரஞ்சோதி சற்று முன் நடந்த சம்பவங்களினால் பெரிதும் அதிர்ச்சியடைந்திருந்தான். ஒரு பக்கம் அவன் உள்ளத்தில் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. அவமானம் ஒரு பக்கம் பிடுங்கித் தின்றது. தன்னை இப்படியெல்லாம் ஒரு கண நேரத்தில் கதிகலங்க அடித்தவன் சாமானியப்பட்டவன் அல்ல, மகா பலசாலியான வீர புருஷன் என்பதை அவன் உணர்ந்திருந்தான். இதனால் அம்மனிதன் பேரில் ஒரு வித மரியாதையும் அவன் மனதில் ஏற்பட்டிருந்தது.

ஆனால் "எந்த ஊருக்குப் போகிறாய், தம்பி!" என்று அந்த ஆள் கேட்டதும், புத்த பிக்ஷு செய்திருந்த எச்சரிக்கைகள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அதனால் அந்த ஆளின் பேரில் சந்தேகங்களும் ஏற்பட்டன.

தன் தோள்மேலிருந்த அவனுடைய கைகளை உதறித் தள்ளிவிட்டு, "நான் எந்த ஊருக்குப் போனால் உமக்கு என்ன?" என்று வெறுப்பான குரலில் கேட்டான் பரஞ்சோதி.

"எனக்கு ஒன்றுமில்லை, அப்பா! ஒன்றுமே இல்லை. இன்று ராத்திரி வழித் துணைக்கு நீ கிடைத்தாயே, அதுவே போதும். ஏதோ இரகசிய காரியமாய்ப் போகிறாயாக்கும். இந்த யுத்த காலத்தில் சகஜந்தானே? ஆனால்......"

இப்படிச் சொல்லி நிறுத்தி, அந்த வீரன் பரஞ்சோதியைச் சற்றுக் கவனமாக உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையின் கருத்தை உணர்ந்து பரஞ்சோதி சித்தமாவதற்குள்ளே, மறுபடியும் அவன் தரையிலே விழும்படி நேர்ந்தது! ஒரே நொடியில் அவ்வீரன் பரஞ்சோதியைக் கீழே தள்ளியது மல்லாமல், தரையில் அவன் அருகில் உட்கார்ந்து கழுத்தை நெரித்துப் பிடித்துக் கொண்டான்.

"நீ சளுக்கரின் ஒற்றன், இல்லையா? சத்தியமாய்ச் சொல்!" என்று கடுமை நிறைந்த குரலில் கேட்டான்.

பரஞ்சோதிக்குக் கோபத்தினாலும் வெட்கத்தினாலும் கண்களில் ஜலம் வரும்போலிருந்தது. அவன் விம்மிய குரலில், "நீர் சுத்த வீரனாக இருந்தால் என்னோடு எதிருக்கெதிர் நின்று வாளோ, வேலோ எடுத்துச் சண்டை செய்யும்!......" என்றான்.

"உன்னோடு சண்டை போட வேண்டுமா? எதற்காக, அப்பா? எதற்காக? நீ வாதாபி ஒற்றனாயிருக்கும் பட்சத்தில் உன்னை இப்படியே யமலோகம் அனுப்புவேன். நீ ஒற்றனில்லையென்றால் உன்னோடு சண்டை போடுவானேன்? நாம் இருவரும் பிராண சிநேகிதர்களாயிருக்கலாம். நீ ஒற்றனில்லையென்பதை



அத்தியாயம் 29

வழித் துணை

குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு பரஞ்சோதி அதிவேகமாகப் பின்னால் வந்த குதிரையண்டை சென்றபோது, அவன் மனதில் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த பீதியெல்லாம் கோபமாக மாறியிருந்தது. அந்தக் குதிரைமேல் வந்தவனுடைய மார்பில் பாய்வதற்குச் சித்தமாக அவனுடைய வலது கையானது வேலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது.

ஆனால், பரஞ்சோதி அருகில் நெருங்கியதும் அந்தக் குதிரைமீது வந்தவன் செய்த காரியங்கள் வேலுக்கு வேலை இல்லாமல் செய்து விட்டன!

ஆஜானுபாகுவாய், முகத்தில் பெரிய மீசையுடனும், தலையில் பெரிய முண்டாசுடனும் விளங்கிய அந்தத் திடகாத்திர மனிதன், பரஞ்சோதி அவன் அருகில் வந்ததும், "ஐயையோ! ஐயையோ! பிசாசு! பிசாசு!" என்று அலறிக் கொண்டு குதிரை மீதிருந்து நழுவித் 'தொபுகடீ' ரென்று கீழே விழுந்தான். அதைப் பார்த்த பரஞ்சோதியின் பயம், கோபம் எல்லாம் பறந்துபோய் அவனுக்குச் சிரிப்பு வந்தது. கீழே விழுந்தவன் போர்க்கோலம் பூண்ட வீரன் என்பதையும் அவனுடைய இடையில் கட்டித் தொங்கிய வாளையும் பார்த்ததும் பரஞ்சோதி 'கல கல' வென்று சிரிக்கத் தொடங்கினான். பேய், பிசாசுக்குப் பயந்தவன் தான் ஒருவன் மட்டும் அல்ல என்பதை நினைத்தபோது அவனுக்கு ஒரு வகையான திருப்தி உண்டாயிற்று.

கீழே விழுந்த மனிதன் மீண்டும், "ஐயையோ! பிசாசு சிரிக்கிறதே! பயமாயிருக்கிறதே!" என்று அலறியபோது, அந்தக் காட்சியானது பரஞ்சோதிக்கு எல்லையில்லாத உவப்பை உண்டாக்கிற்று. அந்த வேடிக்கையை இன்னும் கொஞ்சம் அநுபவிக்க விரும்பி அவன் குதிரைமேலிருந்தபடியே வேலை நீட்டிக் கீழே கிடந்தவனுடைய கையில் இலேசாகக் குத்திய வண்ணம், பிசாசு பேசுவதுபோல் தானாகக் கற்பனை செய்து கொண்ட அடித்தொண்டைக் குரலில், "அடே! உன்னை விடமாட்டேன்! விழுங்கி விடுவேன்!" என்றான்.

அதற்கு அடுத்த வினாடி பரஞ்சோதி சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்று நடந்தது. அது என்ன வென்பதை அச்சமயம் அவனால் நன்கு தெரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. ஒரு கணம் அவன் தலைகீழாகப் பாதாளத்தில் விழுவதுபோலிருந்தது. அடுத்த கணம் அவன் தலையின் மேல் ஆயிரம் இடி சேர்ந்தாற்போல் விழுந்தது! அதற்கு அடுத்த விநாடி அவனுடைய மார்பின் பேரில் விந்திய பர்வதம் வந்து உட்காருவதுபோல் தோன்றியது. பிறகு, ஒரு பிரம்மாண்டமான பூதம், 'ஹா ஹா ஹா' என்று பயங்கரமான பேய்க் குரலில் சிரித்துக்

சொத்தை பக்தி!

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

தஞ்சை விஜயராகவ நாயக்கர் இகலோகத்தை மறந்து பரம பதத்தில் மோகங் கொண்டார்; அவர் நாடெங்கும் ராம பஜனை நடக்கச் செய்தார். ஆனால் படை வலி பெருக்க மறந்தார். "ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம், ரகுபதி ராகவ ராஜாராம் பதித பாவன சீதாராம்" என்று நாடெங்கும் நாமாவளி மயமானது. தோளொலியும் வாளொலியும் அதில் மறைந்தன. மந்திரி கோவிந்த தீக்ஷிதர் மகா ரசிகர், புலவர், அறிஞர், அரசியல் நிபுணர். "அரசே! இந்த உலகில் பிழைக்க வேண்டுமானால் திருநாமத்துடன் தீட்டிய வாளும் திண்ணிய தோளும் வேண்டும். சொத்தை சொன்னைகள் கண்டனுக்கு 'கோவிந்தா!' போட்டுப் பயனென்ன? வீரர் ராம நாமம் பாடிப் பகைவரை வென்றால் அதற்கொரு மதிப்புண்டு" என்று அவர் வற்புறுத்திச் சொன்னார். அரசன் கேட்கவில்லை.

மகன் மன்னாரு, "அப்பா, அரியணை என்றால் பகைவரும் உண்டு; படை வலி வேண்டும்; வெறும் ராம ஜபத்தால் எதிரி பயந்தோடுவானா?" என்றான். "அதிகப் பிரசங்கி" என்று நாயக்கர் மகனையும் சிறையிட்டு ஜபமாலை யுருட்டினார். தீக்ஷிதர் மன்றாடி விடுதலை செய்தார். இதுதான் சமயம் என்று பகைவர் இரகசியக் கூட்டம் நடத்தினர். அவர்களை இராமபத்திர நாயக்கன் திருக்காட்டுப் பள்ளியிலிருந்து தூண்டி விட்டான். இராமபத்திரன் ராம சத்துரு; பரம நாத்திகன்; முரட்டுக் குண்டன்; மூளை யெல்லாம் பொறாமைத் தேள்; ஆளுக்கு வெடி வைக்க அலுக்காது வேலை செய்வான். அங்கே ராம நாமமே கற்கண்டு; நன்றாக மென்றுகொண்டு தூங்குங்கள் என்று அரசருக்குக் குழையடித்தான். இங்கே ஒரு காதல் நாடகம் ஜோடித்தான். மதுரை சொக்கநாத நாயக்கருடன் சூழ்ச்சி செய்து தேதியும் குறிப்பிட்டான்.

தஞ்சை நாயக்கருக்கு ஒரு தங்கை — பெயர் மூர்த்தியம்மாள்; அவளைத் தனக்குத் தரவேண்டுமென்று மதுரை நாயக்கர் தூதனுப்பிக் கேட்டார். "மங்கம்மாளைப் பட்டினி போட்டுக் கொன்றான்; பக்தியில்லாத பாஷண்டி; அவன் முகத்தைப் பாரேன்" என்று தஞ்சை நாயக்கர் ஆத்திரமாகப் பதில் சொன்னார். மந்திரி, தளவாய், முதலிய அறிவாளர், "பெண்ணைத் தந்து சமாதானமாகப் போவதே நல்லது. நமக்குப் படைவலி யில்லை; ஜாலராதான் பாக்கி. மதுரைச் சேனை வந்தால் ஊர் சுடுகாடுதான்" என்றனர். நாயக்கர் கேட்கவில்லை. பகைவர் மதுரை நாயக்கரைத் தூண்டி விட்டனர். போர் மூண்டது. தஞ்சாவூர் சேனை மடிந்தது; விஜயராகவன் அந்தப்புரத்திற்கு வெடி வைத்தான்; வாளை எடுத்துப் போர்க்களம் சென்றான். அங்கே ராமநாமம் சொல்லிக் கொண்டே இறந்தான்.

படையூற்றமின்றிப் பதறுஞ் செருக்கு
நடையாலே நாடு நலியும்; — நீடமான
பக்தியும் வேண்டும்; பகைவரை வென்-
[றடக்கச்
சக்தியும் வேண்டுந் தனக்கு.



இருக்க முடியுமா?

"அடியே, கோட்டுப் பையிலிருந்து அம்பிப்பயல் சில்லறை எடுத்திருக்கான் போலே யிருக்கு..."

"என் கொழந்தை மேல் பழியைப் போடறேன்? நான் எடுத்திருக்கப்படாதோ?"

"இருக்க முடியாதே, மீதி சில்லறை பாக்கி இருக்கே!"

கைகேயியை நோக்கிப் பேசுகிறான். "தந்தை உயிரிழந்தான். அருமைத் தமையன் காட்டுக்குப் போய் விட்டான். எல்லாம் உன் சூழ்ச்சியினால்தான் என்று கேட்டேனே! கேட்டும் நான் ஒன்றும் செய்ய வில்லையே!"

'மாண்டனன் எந்தை, என்
தம்முன் மாதவம்
பூண்டனன், நின்கொடும்
புணர்ப்பி னால்என்றால்,
நீண்டிலென் வாயது,—
கேட்டு நின்றயான்
ஆண்டனை னேஅன்றே,
அரசை ஆசையால்'

[மாண்டனன் எந்தை: தந்தை தசரதன் உயிர் துறந்தான்; என் தம் முன் மாதவம் பூண்டனன்: என் அருமைத் தமையன் தவம் பூண்டான் — காட்டையும் ராமனையும் சேர்த்துச் சொல்ல நாஎழுவில்லை பரதனுக்கு; ன் கொடும் புணர்ப்பினால் என்றால்: உன்னுடைய கொடிய சூழ்ச்சியினால் என்று சொல்லியும் விட்டாய்; நீண்டிலன் வாயை: அந்த வாயைக் கிழிக்க வில்லையே நான்; சும்மாதானே கேட்டுக் கொண்டிருந்தேன்? அதன் பொருள் என்ன — ஆண்டனனே அன்றே அரசை ஆசையால்.]



இந்தக் கோபம் ஆற்றாமை யெல்லாம் பரதனது மனதைக் கொதிக்கப் பண்ணி விட்டது. உலகத்தை விட்டுத் தருமமே போய்விட்டது என்ற பயம் மேலிட்டு விட்டது. மனசு ஸ்தம்பித்து விட்டது. ஆனாலும் பாருங்கள், சிறிது நேரம் கழித்துத் தேறுதலும் நம்பிக்கையுமே உண்டாகின்றன. "தர்மத்துக்கு அழிவேது? சூழ்ச்சி செய்து வைத்திருக்கிற இந்த அக்கிரமம் ஒரு நிலையான காரியமா? அல்ல. தர்மம் கெட்டுப் போகவில்லை. இன்றைக்குத்தானே ஒரு அரசன் உயிர் துறந்திருக்கிறான்? ஒரு வீரன், தனக்குரிய ராஜ்யத்தைத் துறந்து காட்டுக்குப் போனது இன்றைக்குத்தானே? இந்த இரண்டு செயலும் தர்மம் நிலைத்திருக்கிறது என்று தானே காட்டுகின்றன?

'மானவும் உனன்ஒரு
மன்னன்: வன்சொலால்
மீனவும் உனன்ஒரு
வீரன் ;— மேயபார்
ஆனவும் உனன்ஒரு
பரதன் ஆம்எனில்
கோன்அல(து) அறநெறி
குறையுண் டாகுமோ?'

[மானவும் உனன் ஒரு மன்னன்: தருமத்துக்காக உயிர் விடவும் இருக்கிறான் ஒரு அரசன் — தசரதன்; வன் சொலால் மீனவும் உனன் ஒரு வீரன்: கைகேயி சொன்ன கொடிய வார்த்தையால் தயங்கி நிற்காமல் அப்படியே காட்டுக்குப் போக இருக்கிறான் ஒரு வீரன்; மேயபார்: தனக்கு என்று வந்த தாம் ராஜ்யம். அந்த ராஜ்யத்தை; ஆனவும் உனன் ஒரு பரதனும் எனில்: ஆளுகிறதற்கு இருக்கிறான் ஒரு ஆசாமி என்று ஏற்படுமானால் அது எதைக் காட்டுகிறது? ஏதோ கிரகங்களின் தாற்காலிக தோஷந்தான்; கோன் அலது அறநெறிக் குறையுண்டாகுமோ: கிரகங்களின் தோஷமல்லாது தர்ம மார்க்கத்துக்கு அழிவு உண்டாகும் என்று உண்டா?]

உலகத்தில் சகிக்க முடியாத அக்கிரமங்கள் ஆங்காங்கு நிகழ்ந்து தான் இருக்கின்றன. அது காரணமாக மனம் தத்தளித்து நம்பிக்கை அற்றுப் போவதுண்டு எல்லாருக்குமே. ஆனாலும் சில அபூர்வமான புண்ணிய ஆத்மாக்களுக்கு நம்பிக்கை அற்றுப் போகாது. தர்மமே ஜயம் என்று தான் சொல்லிக் கொண்டிருப்பார்கள்; எண்ணிக் கொண்டும் தான் இருப்பார்கள். அத்தகைய உறுதி கொண்டவன் பரதன்.

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

64.- தர்மத்துக்கு ஏது அறிவு?

அண்ணன் ராமனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையோடு அல்லவா பரதன் வந்தான்? முதலில், தந்தை இறந்தான் என்கிற செய்தி அவனைத் தாங்க முடியாத துயரத்தில் அமிழ்த்தி விட்டது. கொஞ்சம் அந்தத் துயரத்திலிருந்து தெளிவு வந்தது.

ராமனை அடைந்து கொஞ்சம் ஆறுதல் அடையலாம் என்று எண்ணியவனுக்குக் கைகளைக் குவித்துக் கொண்டு நடக்கிறான். அந்த வேளை ராமனைக் காட்டுக்கு அனுப்பி விட்டேன் என்று கைகேசி சொல்லுகிறாள். இந்த வார்த்தையைக் கேட்டுச் சகிக்க முடியுமா பரதனுக்கு? அதோடு நிற்க வில்லை. ராஜ்யத்தையும் உனக்கு ஆக்கிவிட்டேன் என்றும் சொன்னாள்; பரதன் படும் பாட்டைப் பாருங்கள்.

கூடின மலர்க்கரம்,
  சொல்லின் முன்செவி

கூடின, புருவங்கள்
  குதித்துக் கூத்துநின்(று)

ஆடின, உயிர்ப்பினோ(டு)
  அழல்க்கொ ழுந்துகள்

ஓடின, உமிழ்ந்தன
  உதிரம் கண்களே.

[கூடின மலர்க்கரம் சொல்லின் முன் செவி கூடின: கைகேசி வார்த்தை சொல்லி முடிப்பதற்குள்ளேயே தலையில் குவிந்திருந்த கைகள் இறங்கிக் காதைப் பொத்திக் கொண்டன.—காதால் கேட்கச் சகிக்கவில்லை; புருவங்கள் குதித்துக் கூத்து நின்றாடின: படபட என்று புருவங்கள் துடித்தன— கோபம் காரணமாக; உயிர்ப்பினோடு அழல்க் கொழுந்துகள் ஓடின: சுவாசம் விடும்போது நெருப்புச் சுவாலைகளும் உடன் ஓடினவோ என்று சொல்லத் தோன்றுகிறது; உமிழ்ந்தன உதிரம் கண்களே: துயரத்தினாலும் கோபத்தினாலும் சிவந்துபோன கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தன — இரத்தத் துளிகள் தானோ என்று சொல்லும்படியாக.]

பரதனது ஆங்காரம் அடங்காத ஆங்காரம். கைகேசியை எதுவும் செய்யத் தயாராக இருக்கிறான். மனம் அப்படித் தூண்டுகிறது அவனை.

கொடியவெங் கோபத்தால்க்
  கொதித்த கோளரி,


கடியவள், தாய்எனக்
  கருது கின்றிலன்;

நெடியவன் முனியும்என்(று)
  அஞ்சி நின்றனன்,—

இடியுறும் அனையவெம்
  மொழிஇ யம்புவான்.

[கொதித்த கோளரி: கோபம் பொங்கி வந்த சிம்மம் போன்ற பரதன்; கடியவள்: இரக்கமற்ற கைகேசி; நெடியவன் முனியும் என்று: ராமன் கோபிப்பான் என்ற காரணத்தினாலேயே; இடி உறும் அனைய: பேரிடிக்குச் சமானமான; இயம்புவான்: பேசுவான்.]





இந்திய தேயிலையின் அபிவிர்த்தி
இந்தியா அதைத் தனக்கே சொந்த மாக்கிக்கொண்டது
100 MILLION POUNDS
50
0
இந்தியத்தேயிலை
உலகத்தின் உன்னத பானம்

ஆகாச வெடி

"திருவல்லிக்கேணி ஜன்னவுன் ரோடை அவிபெனண்ட் ரோடு என மாற்றி அமைக்கலாமென்று கார்ப்பொரேஷன் கூறிய யோசனையை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறது." —ஒரு செய்தி.

ஜன்னவுன் ரோட் என்ற பெயரை இந்த வெயில் காலம் வரையாவது மாற்றாமல் வைத்திருக்க வேண்டுமென்று நாம் யோசனை கூறுகிறோம்.

★

"ஸ்ரீமதி பிரிஜ்ராணி ரஹிம் என்ற நடிகை ஒரு ஸ்டண்ட் படத்தில் நடித்துக் கொண்டிருக்கையில், சிங்கத்துக்கும் அவளுக்கும் ஒரு பெரிய யுத்தம் மூண்டுவிட்டது. யுத்தம் பலத்த உடனே அங்கிருந்த டெக்னிஷியன்கள் உதவிக்கு வரும்படி ஆயிற்று."

—ஒரு செய்தி.

அதாவது, சிங்கத்தின் உதவிக்கு அவர்கள் வரும்படி ஆயிற்று என்று கருதுகிறோம்!

★

"சென்னைக் கார்ப்பொரேஷன் கமிஷனர் ஸ்ரீ புல்லா ரெட்டியின் பதவிக் காலம் முடிவடைவதால் ஸ்ரீ ஜே. பி. ஷெனாய் கமிஷனராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்."

—சென்னைச் செய்தி



இந்தப் புதுக் கமிஷனராவது நகர சபை அங்கத்தினர்களின் சண்டையில் தலையிட்டு அவர்கள் 'கதர்ஷ'த்தைப் பறிக்காமல் இருப்பாராக!

★

"பகாரத்தூர் என்னும் கிராமத்தில் ஒரு பிடில் வித்வான் தமது பிடிலை மீட்டிப் புன்னகவராளி ராகம் வாசித்து விட்டுப் படுத்துக் கொண்டார். அவர் தூங்கும்போது ஒரு நல்ல பாம்பு வந்து அவர் முகத்தையும் காதுகளையும் நக்கி விட்டுப் போயிற்று." —ஒரு தினசரி.

அது ஒரு நல்ல பாம்பாயிருக்குமென்றே நாம் கருதுகிறோம்!

மயிலை சங்கீத சபைக் கச்சேரியில் எம். எஸ். கர்நாடக சங்கீதத்தின் உயர்வுக்கே ஓர் எல்லையைக் காட்டினார் என்று சொல்ல வேண்டும்.

மாலை 5-30க்கு "நீ இந்த மாயம் செய்தால்" என்ற தன்யாசி வர்ணம் ஆரம்பித்ததிலிருந்து, இரவு 10 மணிக்கு "செந்தமிழ் நாடெனும் போதினிலே" பாடி முடிக்கும் வரையில், சபை மண்டபத்தில் ஒரே இன்னிசை வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

இந்த அபாரமான கச்சேரியைப் பற்றி, தமிழ்நாட்டில் முதன் முதலில் சங்கீத விமர்சனம் எழுதத் தொடங்கிய பெருமைக்குரியவரான ஸ்ரீ எ. கிருஷ்ணையர் அவர்கள், 'ப்ரீ பிரஸ்' பத்திரிகையில் இரண்டு பத்தி குதூகலமாக எழுதியிருப்பதில் ஒரு வார்த்தையாவது மிகை என்று சொல்வதற்கில்லை.

கர்நாடக சங்கீதத்தின் முக்கியமான அம்சங்களில், கார்வை, நிரவல் என்னும் இரண்டு அம்சங்களையும் எம். எஸ். ஸைப் போல் அவ்வளவு நிறைமையாகக் கையாண்டு பிரபலப்படுத்தியவர் வேறு யாருமில்லை என்று ஸ்ரீ எ. கிருஷ்ணையர் கூறுவதை சங்கீத ரஸிகர்கள் அனைவரும் பூரணமாக ஆமோதிப்பார்கள்.

அன்றையக் கச்சேரியில் பந்துவராளி, காகரப்ரியா, கல்யாணி ஆகிய ராகங்களின் ஆலாபனங்கள் ஒன்றைவிட ஒன்று மேலாகி வந்து, கடைசியில் சங்கராபரண ஆலாபனத்தின்போது கச்சேரியானது உச்சத்தை அடைந்தது.

அதே மாதிரி மேற்படி ராகங்களுக்குரிய கீர்த்தனங்களிலே நிரவல்களும், பல்லவி ஸ்வரமும் ஒன்றுக்கு மேல் ஒன்று உயர்வடைந்து வந்தன. ஸாஹித்யத்தின் அர்த்த பாவத்தை நன்கு உணர்ந்து, ராக பாவத்தைப் பூரணமாகப் பயன்படுத்தி, விளம்ப காலத்திலும், மத்திம துரித காலங்களிலும் படிப்படியாக எம். எஸ். நிரவல் செய்து வரும் போது, அவரும் தம்மை மறந்து விடுகிறார்; கேட்கிறவர்களும் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் தங்களை மறந்து விடுகிறார்கள்.

அன்று எம். எஸ். பாடிய கீர்த்தனங்களுக்குள்ளே சிகரமாக விளங்கியது, "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே!" என்னும் கீர்த்தனம். மத்திம சுருதியில் வீணைத் தந்திபோல் ஒலிக்கும் குரலில் இந்தக் கீர்த்தனத்தை எம். எஸ். உணர்ச்சி ததும்பப் பாடுவது போல் வேறு யாரும் பாட முடியாதென்பது வெகு ஜன வாக்கு. ஆனால் அன்றைக்கு மயிலை சங்கீத சபையில் அந்தப் பாட்டைப் பாடியதுபோல் எம். எஸ். ஸினாலேயே மறுபடியும் பாட முடியாதென்பது அன்று கச்சேரி கேட்டவர்களின் ஒருமுகமான அபிப்பிராயம்.

* * *

கர்நாடக சங்கீதத்துக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் கிராக்கி முன் எப்போதும் ஏற்பட்டதில்லையென்று தோன்றுகிறது. எங்கே பார்த்தாலும் புதிய புதிய சங்கீத சபைகள் தோன்றி வருகின்றன. சில இடங்களில் இராணுவக் கண்டிராக்டர்கள் சிப்பாய்களுக்கு உல்லாசக் கச்சேரிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக் கர்நாடக சங்கீத சபைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகிறது! இந்த யுத்த காலக் குழந்தைகள், தங்கள் தலையில் 'அற்பாயுள்' என்று எழுதிக்கொண்டே பிறந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு மாறாக, கர்நாடக சங்கீதத்தில் உண்மையான அபிமானத்துடன் சங்கீத வளர்ச்சியே நோக்கமாகக் கொண்ட சபைகள் சிலவும் சமீபகாலத்தில் தோன்றியிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது மயிலை சங்கீத சபையாகும்.

கட்சிப் பிரதி கட்சிகளுக்கும் வாதப் பிரதி வாதங்களுக்கும் இடங் கொடுக்காமல், சொந்த விருப்பு வெறுப்புகளைப் புகுத்தாமல் நல்ல சங்கீதத்தை நல்ல மனதுடன் அநுபவிப்பதற்காக வென்றே மேற்படி சபையை முக்கியமாக சில ஐ. சி. எஸ். ரஸிகர்கள் சேர்ந்து ஆரம்பித்தார்கள். அதிர்ஷ்டவசமாக இவர்களுக்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்னும் இரண்டு நல்ல காரியதரிசிகள் கிடைத்தார்கள். எந்தப் பொதுக் காரியமாயிருந்தாலும், சுயநலங் கருதாத ஊக்கத்துடன் ஈடுபட்டு உழைத்தால், அது எப்படி ஓங்கி வளரும் என்பதற்கு மயிலை சங்கீத சபை ஒரு சிறந்த அத்தாட்சியாக விளங்குகிறது.


ஸ்ரீ சத்தியமூர்த்தி

ஐந்து ரூபாய் பரிசு : சென்ற இதழில் வெளியான "யார் இவர்?" என்னும் கண ஜேபத் துணுக்குக்கும் பரிசு பெற்றவர் : கே. ராஜேந்திரர், c/o ச. ராஜா, அயினாவரம்.

எனக்கு வருத்தமாயிருந்தது. இன்னும் செம்பைக்கு அந்த கௌரவம் அளிக்கப் படாதது பெரிதும் வியப்பான விஷயந்தான்.

செம்பை வைத்தியநாத பாகவதர், மகாராஜபுரம் விசுவநாதய்யர், காரைக்குடி சாம்பசிவய்யர் முதலிய ஜாம்பவான்கள் கர்நாடக சங்கீத உலகில் இருக்கும்போது, வயதிலும் அநுபவத்திலும் குறைந்தவர்களை அகாடமி அக்கிராசனர்களாகத் தேர்ந்தெடுத்தது முறையான காரியம் என்று சொல்ல முடியாது. இவ்வருஷத்திலாவது மேற்படி மூவரில் ஒருவர் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப் படுவார் என்று நம்புகிறேன்.

* * *

மற்றப்படி அன்று செம்பை கச்சேரி எப்போதும்போல் அமோகமாக, — அமர்க்களமாக,— ஜிஞ்ஜாமிர்தமாக, — கர்ணாமிர்தமாக, — நடைபெற்றது.

செம்பையின் வெண்கல நாத சாரீரம் இருபது வருஷத்துக்கு முன்னால் ஒலித்தது போலவே இன்றைக்கும் நவ யௌவனத்துடன் கணீரென்று ஒலிப்பது ஒரு பெரிய விந்தையாகும். அப்பேர்ப்பட்ட திவ்ய சாரீரத்தில் அவர் சில சமயம் கீர்த்தனங்களில் சங்கதிகள் போடும்போது, இராம பாணங்களைப் போல் அவை அதிவேகமாய்க் கிளம்பி வானத்தையும் பூமியையும் வளைத்துச் சுற்றிக்கொண்டு வந்து திரும்பவும் அவருடைய அம்புறாத் தூணியில் புகுந்து சங்கீதத் துறையில் ஒரு பெரிய அற்புதமாகவே தோன்றும்.

செம்பை ஒரே ஒரு கீர்த்தனத்தை விஸ்தாரமான சங்கதிகளுடனும், நிரவல்களுடனும், ஸ்வரப் பிரஸ்தாரங்களுடனும் ஒன்றரை மணிநேரம் பாடினாலும் பாடுவார்; அல்லது நேரம் ஆகிவிட்டால் மூன்றே நிமிஷத்தில் முடித்தாலும் முடித்து விடுவார்!

இப்படித்தான் அன்றைக்கும் முதலில் பாடிய, 'வாதாபி கண' 'ஏதா உனரா' முதலிய கீர்த்தனங்களை வெகு விஸ்தாரமாகப் பாடி விட்டு அப்புறம் அதிவேகமாய் அடித்துக்கொண்டு போனார்.

செம்பையின் கச்சேரியில் பக்க வாத்தியக்காரர்களுக்கு உண்டாகும் குஷியும் உற்சாகமும் வேறு கச்சேரிகளில் உண்டாவதில்லை. ஒவ்வொரு பக்க வாத்திய வித்வானையும் அவர் திரும்பிப் பார்த்து, 'பலே' என்றும், 'சபாஷ்' என்றும் கூறிக் குஷிப்படுத்தும் போது, அவர்களுக்கு உண்டாகும் உற்சாகம் எல்லையைக் கடந்து விடுகிறது. அன்று தான வாத்தியக்காரர்கள் எல்லாருமாகச் சேர்ந்து ஒரு தடவை முக்கால் மணி நேரம் மாற்றி மாற்றிச் சக்கைப் போடு போட்டார்கள்! எல்லாரும் பெரிய கைகளானபடியால் அவ்வளவு நேரமும் கேட்பதற்குச் சிறிதும் அலுப்பு உண்டாகாமலிருந்தது.

* * *

மயிலை சங்கீத சபையை முதன் முதலில் ஆரம்பித்து வைத்த ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஏப்ரல் 30உ யன்று மேற்படி கச்சேரி ஸீரிஸின் கடைசிக் கச்சேரியைச் செய்து மங்களகரமாகப் பூர்த்தி செய்வித்தார்.

சுமார் ஒன்றரை மாதம் ஸ்ரீமதி எம். எஸ். வடநாட்டில் * சுற்றுப் பிரயாணம் செய்து, சென்ற இடங்களில் எல்லாம் கர்நாடக சங்கீதத்தின் பெருமையை நிலை நாட்டி விட்டுத் திரும்பி யிருப்பதைப் பற்றி அன்று கச்சேரிக்கு அக்கிராசனம் வகித்த ஸ்ரீ புல்லா செட்டியார் குறிப்பிட்டு விட்டு "எம். எஸ். ஸின் வடநாட்டுப் பிரயாணத்துக்குப் பிறகு அவருடைய சங்கீத டெக்னிக் இன்னும் உயர்ந்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் சங்கீதப் பண்டிதர்கள் என்ன சொல்வார்களோ, தெரியவில்லை!" என்றார்.

சங்கீத பண்டிதர்கள் சொல்வது ஒருபுறமிருக்க, ஒன்றரை மாதத்துக்குள்ளே ஸ்ரீமதி எம். எஸ். ஸின் சங்கீத வித்வத்தின் தரம் அபிவிருத்தி யடைந்து விட்டதாக யாருமே ஒப்புக்கொள்ள முடியாது.

உண்மை என்னவென்றால், சென்ற சில காலமாக எம். எஸ். ஸின் கச்சேரி ஒவ்வொன்றையும் கேட்கும்போது, "முந்தைய கச்சேரிகளை யெல்லாம் இது தூக்கி யடித்து விட்டது!" என்று எல்லாருக்கும் தோன்றுவது வழக்கமாகி விட்டது. அப்படி அவருடைய கச்சேரிகள் மேலும் மேலும் உயர்வாக அமைந்து கொண்டே போகின்றன.

---

* ஸ்ரீமதி எம். எஸ். வடநாட்டில் பல இடங்களிலும் செய்த கச்சேரிகளைப் பற்றி ஆங்காங்குள்ள தமிழர்கள் மிகப் பெருமையுடன் நமக்குக் கடிதங்கள் எழுதி யிருக்கிறார்கள். முக்கியமாக, ஆமதாபாத்தில், தமிழ் வருஷப் பிறப்பன்று, குஜராத்திகளும் தமிழர்களும் ஆயிரக் கணக்கில் கூடி யிருந்த சபையில் எம். எஸ். அளித்த மகத்தான இசை விருந்தைப் பற்றி ஆமதாபாத்திலுள்ள தமிழர்கள் அளவற்ற உற்சாகத்துடன் எழுதியுள்ளார்கள். அந்தக் கடிதங்களை யெல்லாம் இட நெருக்கடி காரணமாகக் "கல்கி" நேயர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாமலிருப்பது பற்றிப் பெரிதும் வருந்துகிறேன்.

ஆடல் பாடல்

“ கர்நாடகம் ”

சமீபத்தில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுச் சிறப்பாக நடந்துவரும் மயிலை சங்கீத சபையின் சங்கீத மேடையானது சென்ற ஏப்ரல் 9உ வெகு சோபிதமாக விளங்கிற்று. பெரிய பெரிய பக்க வாத்தியக்காரர்களின் வித்வத் கனம் தாங்காமல் மேடை திணறிக் கொண்டிருந்தது.

மேற்படி புதிய சபையார் நடத்திய முதலாவது ஸீரிஸ் கச்சேரிகளில் அன்று ஒரு பெரிய தடபுடலான கச்சேரி.

கர்நாடக சங்கீத வானத்தில் துருவ நட்சத்திரம்போல் மங்காத ஒளியுடன் பிரகாசித்து வரும் செம்பை வைத்தியநாத பாகவதர் மேடையின் நடுவில் கம்பீரமாக வீற்றிருந்தார்.

செம்பையைச் சுற்றிலும் பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை, கஞ்சிரா சுப்பிரமணியப் பிள்ளை, மிருதங்கம் மணி ஐயர், மோர்சிங் ஸச்சிதானந்தம் ஐயர், கடம் வில்வாத்ரி ஐயர் ஆகியவர்கள் அமர்ந்திருந்ததுடன், செம்பைக்குப் பின்னால் அவருடைய மாப்பிள்ளை ஹார்மோனிய சுருதி போட்டுக் கொண்டும் அவ்வப்போது கூடப் பாடிக் கொண்டு மிருந்தார்.

மேடைக்கு எதிரிலோ, முசிரி, ஜி. என். பி. ஆகிய பிரபல வித்வான்களும், ஸ்ரீ நரசிம்மன் டி. வி. எஸ். முதலிய கனம் பொருந்திய ரஸிகர்களும் அமர்ந்து கச்சேரியைச் சிறப்பித்துக் கொண்டிருந்தார்கள்.

முக்கியமாக, முசிரி சுப்பிரமணிய ஐயர் கச்சேரிக்கு வந்தபோது செம்பை அவரை வரவேற்று வெகுவாகப் பாராட்டியதுடன் தமது திருப்தியை ஒலிபெருக்கியின் மூலம் பின்வருமாறு பகிரங்கமாகத் தெரியப் படுத்தினார் :—

“ ‘வைதிகப் பிராமணர்கள், சங்கீத வித்வான்கள், வேணிகள், வைத்தியர்கள், நாய்கள் இவர்கள் எல்லாரும் சண்டை போடுவதற்குக் காரணமே வேண்டியதில்லை; ஒருவரை யொருவர் பார்த்தாலே போதும்’ என்பது சாஸ்திரம். ஆகையால், முசிரி ஐயர்வாள்! தாங்கள் என் கச்சேரிக்கு வந்ததுதான் எனக்குப் பரம திருப்தி யளிக்கிறது!” என்று செம்பை கூறியதைச் சபையோர் கொம்மாளத்துடன் கரகோஷம் செய்து ஆமோதித்தார்கள்.

இதே மாதிரியாக முசிரி சுப்பிரமணிய ஐயர்வாளைச் செம்பைவைத்தியநாதபாகவதர் பாராட்டிய ஒரு பழைய சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது. அந்த வருஷத்தில் முசிரி சுப்பிரமணிய ஐயரை மியூஸிக் அகாடமி அக்கிராசனராகத் தேர்ந்தெடுத் திருந்தார்கள். இந்த கௌரவத்தை முன்னிட்டு முசிரியைப் பாராட்டுவதற்காக அவருடைய அபிமானி ஒருவர் விருந்து அளித்தார். விருந்துக்கு ரஸிகர்களும் வித்வான்களும் பலர் வந்திருந்தார்கள். அவர்களில் செம்பையும் ஒருவர்.

உணவு விருந்துக்குப் பிறகு பேச்சு விருந்து நடந்தது. முசிரியின் சங்கீத வித்வத்தையும், அவர் சாஹித்யத்தை நன்கு உச்சரித்து பாவத்துடன் பாடும் அழகையும் பற்றிப் பலர் பாராட்டினார்கள். “முசிரிக்குச் சமானம் முசிரிதான்!” என்றும் சொன்னார்கள். பலர் பேசிய பிறகு செம்பையை “நீங்களும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்!” என்று விருந்தளித்த பிரமுகர் கேட்டுக் கொண்டார். “ஆஹா!” என்று செம்பை எழுந்திருந்தார். “மியூஸிக் அகாடமிக்கு அக்கிராசன பதவி வகிக்க முசிரி சுப்பிரமணிய ஐயர்வாள் ரொம்பவும் தகுதியுடையவர்; அவரைப்போல் தகுதியுடைய வித்வான் வேறு யாரும் இல்லை. ஆகையால் முசிரி சுப்பிரமணிய ஐயர்தான் இந்த வருஷத்து அகாடமிக்கு அக்கிராசனம் வகிக்கவேண்டும்; அடுத்த வருஷமும் முசிரி ஐயர்வாளே அக்கிராசனம் வகிக்க வேண்டும்; அதற்கு அடுத்த வருஷமும் அவரே அக்கிராசனரா யிருக்க வேண்டும்; எப்போதும் அவரே அக்கிராசனரா யிருக்கவேண்டும்!” என்று சொல்லி விட்டுச் செம்பை உட்கார்ந்தபோது, அங்கிருந்தவர்களுடைய முகங்களில் ஈ ஆடவில்லை; அவரைப் பேசச் சொன்ன பிரமுகரின் முகத்திலோ அசடு வழிந்தது.

“ அடாடா! இந்தப் பழைமையான கர்நாடக சங்கீத வித்வானை அகாடமி சங்கீத மகாநாட்டின் அக்கிராசனராக ஏன் இன்னும் தேர்ந்தெடுக்க வில்லை?” என்று அப்போது

(1) காங்கிரஸை ஒடுக்குவதற்கு இனிமேல் ஜனாப் ஜின்னாவின் உதவி பிரிட்டிஷாருக்குத் தேவையில்லை.

(2) ஜனாப் ஜின்னாவினுடைய பலமெல்லாம் தாங்கள் அளித்த பலந்தான் என்பதை அவருக்கு ஞாபகப்படுத்தி மட்டந்தட்ட விரும்பினார்கள்.

(3) ஜனாப் ஜின்னாவின் பலம் அளவுக்கு மீறி வளர்ந்து தங்களுடைய தலையிலேயே அவர் கை வைக்க வரும்படியான நிலைமையை பிரிட்டிஷார் விரும்பவில்லை. முக்கியமாக, பஞ்சாப்பில் ஜனாப் ஜின்னா தலையிடுவதையோ அவருடைய அதிகாரம் ஓங்குவதையோ அவர்கள் விரும்பவில்லை.

பஞ்சாப் மாகாணமானது இதுவரையில் இந்த யுத்தத்துக்கு இருபது லட்சம் போர் வீரர்களை அனுப்பியிருக்கிறது. அம் மாகாணத்தில் மாகாண வாசிகளின் தேவைக்கு அதிகமான தானியம் விளைகிறது. அதனால்தான் வங்காளப் பஞ்சத்தை நிவர்த்திப்பதற்குக் கூடப் பஞ்சாப்பிலிருந்து தானியம் அனுப்புவது சாத்தியமாயிற்று.

அப்பேர்ப்பட்ட பஞ்சாப்பில் ஜனாப் ஜின்னா புகுந்து அவருடைய பலத்தை விருத்திசெய்து கொண்டால், அதனால் வகுப்புச் சச்சரவு விருத்தியாகி யுத்த முயற்சிகள் தடைப்படலாம். பட்டாளத்துக்கு ஏராளமான ஆட்களை உதவி வரும் வீர சீக்கிய சமூகம் அதிருப்தியடையலாம்.

யுத்த முயற்சிக்கு பஞ்சாப்பிலிருந்து இப்போது கிடைத்து வரும் உதவிகளில் எள்ளளவும் குறையாமல் பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

மேற்படி நிபந்தனையின் பேரில்தான் பஞ்சாப்பில் மந்திரி சபை ஆட்சி நடப்பதற்கே அதிகார வர்க்கம் அனுமதித்திருக்கிறது. ஜனாப் ஜின்னாவுக்கு ஸர் சோட்டு ராம் எழுதியுள்ள கடிதத்திலிருந்து இது ஸ்பஷ்டமாக வெளியாகிறது.

"யுத்த முயற்சிகளில் நாங்கள் பரிபூரணமாய் ஒத்துழைப்பதாக பிரிட்டிஷ் சர்க்காருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். யூனியனிஸ்ட் மந்திரி சபை முஸ்லிம் லீக் கூட்டு மந்திரி சபையாக மாறினால் மேற்படி வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்ற முடியுமா?" என்று அவர் கேட்டிருக்கிறார். மேற்கண்டவாறு வாக்குறுதி கொடுத்து விட்டு வேலை பார்க்கும் மந்திரி சபையை ஜனாப் ஜின்னாவின் சர்வாதிகாரத்துக்கு உட்படுத்த பிரிட்டிஷார் விரும்புவார்களா?

எனவே, இப்போது பஞ்சாப்பில் நடக்கும் காரியத்தை பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்கும், ஜனாப் ஜின்னாவுக்கும் நடக்கும் அரசியல் சதுரங்க ஆட்டம் என்று கூறுவதில் சிறிதும் தவறில்லை.

அதிகார வர்க்கத்தின் கையினால் குட்டுப்பட்ட ஜனாப் ஜின்னா அந்த அவமானத்தைப் பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டார். அவர் ரோஷக்காரர்; பஞ்சாப்பில் முஸ்லிம் லீக்கைப் பலப்படுத்தவும் யூனியனிஸ்ட் மந்திரி சபையை உடைக்கவும் பெரு முயற்சி செய்தே தீருவார்.

முன்னமே நாம் கூறியது போல், மேற்படி போராட்டத்தின் வெற்றி தோல்விகளைப்பற்றி நமக்குக் கவலை கிடையாது. யார் ஜயித்தாலும் தோற்றாலும் தேசத்துக்கு ஒன்றுதான்.

எனினும், இந்தப் போராட்டத்தின் பயனாக ஜனாப் ஜின்னாவுக்கு பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தை நம்புவதில் பயனில்லை யென்ற ஞானோதயம் ஒருவேளை ஏற்படுமானால், அது நாமனைவரும் மகிழ்ச்சி கொள்வதற்குரிய சம்பவமாயிருக்கும்.

ஜனாப் ஜின்னாவுக்குத் தானாக பலம் வந்துவிடவில்லை; மற்றவர்கள் கொடுத்துத்தான் வந்தது.

காங்கிரஸ்காரர்களும் பிரிட்டிஷ் சர்க்காரும் போட்டி போட்டுக்கொண்டு அவருக்குப் பலம் அளித்து வந்தார்கள்.

ஜனாப் ஜின்னாவுக்கு முஸ்லிம் மக்களிடையே செல்வாக்கு அபரிமிதமாய் வளர்வதற்கு வேண்டிய பலத்தைக் காங்கிரஸ்காரர்கள் அளித்தார்கள்.

ஜனாப் ஜின்னா மாகாணங்களில் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வேண்டிய பலத்தை பிரிட்டிஷ் சர்க்கார் அளித்தார்கள்.

காங்கிரஸ்காரர்கள் ஜனாப் ஜின்னாவுக்குச் செய்த உதவிகள் :—

(1) கையிலிருந்த மாகாண மந்திரி சபைகளைக் கைவிட்டது.

(2) கிரிப்ஸ் திட்டத்தின்படி கிடைத்திருக்கக்கூடிய மத்திய அரசாங்க அதிகாரத்தைப் புறக்கணித்தது.

(3) மாகாணங்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்று காங்கிரஸ் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருந்தும், அதற்கு நேர்மாறாக ''மாகாணங்களுக்கு எப்போதும் பிரிந்து போகும் உரிமை கிடையாது'' என்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றியது.

மேற்கூறிய மூன்று காரியங்களினாலும் ஜனாப் ஜின்னாவின் பலத்தை அபரிமிதமாக வளர்த்து அவரை முஸ்லிம்களின் சர்வாதிகாரியாக நியமிப்பதற்குக் காங்கிரஸ் உதவி செய்தது.

அதே சமயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸுக்கு விரோதமாக ஜனாப் ஜின்னாவைத் தூக்கி விட்டு அவருடைய பலத்தைப் பெருக்கும் கொள்கையைக் கைக்கொண்டனர். அதன்படி அவர்கள் செய்த முக்கிய காரியங்கள் :—

(1) கிரிப்ஸ் திட்டத்தில் பாகிஸ்தான் கொள்கையை ஒப்புக்கொண்டது;

(2) காங்கிரஸ் ஜனாப் ஜின்னாவுடன் சமரசம் செய்து கொள்ளாத வரையில், காங்கிரஸுடன் எவ்வித உடன்படிக்கையும் செய்து கொள்ள மறுத்தது;

(3) சிந்து மாகாணத்தில் அல்லா பக்ஷையும், வங்காளத்தில் பஸ்லுல் ஹக்கையும் கட்டாய ராஜிநாமா செய்யப் பண்ணி, அம் மாகாணங்களில் லீக் மந்திரி சபைகள் அமைக்க வழி செய்து கொடுத்தது.

இவ்விதம் ஒரு பக்கம் காங்கிரஸ் வாதிகளினாலும், இன்னொரு பக்கம் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினாலும் பலம் கொடுக்கப்பட்டு வந்த ஜனாப் ஜின்னாவின் செல்வாக்கானது சமீபத்தில் உச்ச நிலையை அடைந்தது. அதனால் மனித இயற்கையின்படி அவருடைய கர்வமும் வளர்ந்து அபரிமிதமாயிற்று.

இவ்விதம் தலைக்கேறிப் போயிருந்த கர்வத்துக்கு ஏதேனும் ஒரு போக்கு வேண்டுமல்லவா? அதைப் பஞ்சாபிலே காட்டுவதற்குத் தீர்மானித்தார். பஞ்சாப் மந்திரி சபையில் பிரதம மந்திரி முஸ்லிம் லீக்கினர்; பெரும்பாலான மந்திரிகள் முஸ்லிம் லீக்கினர்கள். ஜனாப் ஜின்னா இட்ட கட்டளைகளைச் சிரசால் வகித்து நடத்த அவர்கள் சித்தமாயிருந்தார்கள்.

பிரதம மந்திரி கிஸர் ஹயாத் கான் விடுத்திருக்கும் அறிக்கையில், ''பாகிஸ்தானே எனக்கு ஜீவநாடி; பாகிஸ்தானே என் மூச்சுக் காற்று; பாகிஸ்தானே என் கதிமோட்சம்!'' என்று வற்புறுத்தியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

இப்படியெல்லாமிருந்தும், ஜனாப் ஜின்னா திருப்தியடையவில்லை. பஞ்சாப் மந்திரி சபைக்கு 'யூனியனிஸ்ட் மந்திரி சபை' என்று பெயர் இருப்பது அவருக்குச் சகிக்கவில்லை. இது முஸ்லிம் லீக்குக்கும் தமக்கும் பெரிய அவமானம் என்று நினைத்தார். ''பெயரை 'முஸ்லிம் லீக் மந்திரி சபை' என்று உடனே மாற்றியாக வேண்டும்!'' என்று தாக்கீது விடுத்தார்.

இந்த இடத்திலேதான் பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் குறுக்கிட்டு ஜனாப் ஜின்னாவுக்கு ஒரு முட்டுக் கட்டை போட்டது.

பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் சித்தம் எப்படியிருக்கிறதென்பதை அறிந்த பிரதம மந்திரி கிஸர் ஹயாத் கானும் ஜனாப் ஜின்னாவுக்கு, ''மந்திரி சபையின் பெயரை மாற்ற முடியாது; அது வாக்குறுதிக்கு விரோதம்!'' என்று தைரியமாகப் பதில் அளித்து விட்டார்.

* * *

இவ்விதம் ஜனாப் ஜின்னாவுக்கு இப்போது பிரிட்டிஷ் சர்க்கார் முட்டுக் கட்டை போடத் துணிந்ததின் காரணம் என்ன? சிந்துவிலும் வங்காளத்திலும் அவருக்குச் சர்வாதிகாரப் பட்டம் கட்டி மகிழ்ந்தவர்கள் இப்போது பஞ்சாபில் ஏன் அசட்டுப் பட்டம் கட்டி விட்டார்கள்? அதற்குத் தக்க காரணங்கள் உண்டு. அவை வருமாறு:—

"சுப் ரஹோவா! நான் 'சுப் ரஹோவா' இல்லை!" என்று கர்ஜித்தார்.

இப்படி அவர் கர்ஜித்ததினால் ஏற்பட்ட பலன் என்னவென்றால், பஞ்சாப் மந்திரிகளுக்குள்ளே ஜனாப் ஜின்னாவுக்குப் பணிந்து விடலாம் என்று கூறிய மந்திரிக்கு — ஸர்தார் ஷவுகத் ஹயாத் கானுக்கு — ஒரு பெரிய எண்டான் கல்தா கிடைத்ததுதான்!

* * *

பஞ்சாப் மாகாணத்தில் இப்போது நடந்துவரும் அரசியல் சதுரங்க ஆட்டத்தைப் பற்றி நேயர்கள் அறிந்திருப்பார்கள். இந்தச் சதுரங்க ஆட்டத்தில் மகா மகா மகா பெரிய காயாக ஆடும் ஜின்னா ஒரு கட்சி; மகா மகா மகா மகா பெரிய பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினர் இன்னொரு கட்சி. சதுரங்கத்தில் காய்களாக உபயோகப்படுகிறவர்கள் பஞ்சாப் மந்திரிகளான மலிக் கிஸர் ஹயாத் கான், ஸர் சோட்டு ராம் முதலியவர்கள்.

இந்த அரசியல் சதுரங்க ஆட்டத்தின் சுவாரஸ்யத்தைப் பூரணமாக அனுபவிப்பதற்கு இப்போது நடக்கும் ஆட்டத்தைக் கவனித்தால் மட்டும் போதாது. சென்ற நாலைந்து வருஷமாக ஆட்டத்தின் போக்கு எப்படி இருந்து வருகிறது என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * *

பஞ்சாப் பிரதம மந்திரி மலிக் கிஸர் ஹயாத் கான் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அது என்னவென்றால், பஞ்சாப் மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடந்தபோது முஸ்லிம் லீக்கின் சார்பாக ஒரு அபேட்சகர் கூட வெற்றி பெறவில்லை என்பதுதான்!

பஞ்சாப்பில் மட்டுமல்ல. வேறு எந்த மாகாணத்திலும் சரி. ஐந்து வருஷத்துக்கு முன் புதிய மாகாண சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்தபோது முஸ்லிம் லீக்கர்கள் வெற்றியடையவில்லை. அப்போது முஸ்லிம் லீக்குக்கோ, ஜனாப் ஜின்னாவுக்கோ, எவ்வித பலமும் செல்வாக்கும் தேசத்தில் இருக்கவில்லை. ஒரு மாகாணத்திலாவது முஸ்லிம் லீக் மந்திரி சபை ஏற்பட முடியவில்லை.

பிறகு, சென்ற ஐந்து வருஷத்திற்குள்ளாக, ஜனாப் ஜின்னாவின் பலமும் லீக்கின் செல்வாக்கும் அபரிமிதமாக வளர்ந்து வந்திருக்கிறது. இப்போது வங்காளம், சிந்து, அஸ்ஸாம், எல்லைப்புற மாகாணம் ஆகிய மாகாணங்களில் முஸ்லிம் லீக் மந்திரி சபை நடந்து வருகிறது. அந்த மந்திரிகள் எல்லோரும் ஜனாப் ஜின்னாவை லீக் பாதுஷாவாக ஒப்புக்கொண்டு அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றி வருகிறார்கள்.

ஆனால் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராயுள்ள மற்றொரு பெரிய மாகாணமாகிய பஞ்சாப்பில் மட்டும் நாளது வரையில் முஸ்லிம் லீக் மந்திரி சபை ஏற்படவில்லை.

அந்த மாகாணத்தில் தீர்க்க திருஷ்டியுள்ள முஸ்லிம் இராஜதந்திரி ஒருவர் இருந்தார். அவர்தான் ஸிக்கந்தர் ஹயாத் கான். யூனியனிஸ்ட் கட்சியின் பெயரால் பஞ்சாப்பில் மந்திரி சபையை ஏற்படுத்தியவர் அவர்தான். அந்த யூனியனிஸ்ட் மந்திரி சபையில் ஹிந்துக்களையும் சீக்கியர்களையும் அவர் ஒத்துழைக்கும்படி செய்தார்.

ஜனாப் ஜின்னாவின் சர்வாதிகாரத்தை ஸிக்கந்தர் கொஞ்சமும் விரும்பவில்லை. அவர்களுக்குள் எப்போதும் ஒற்றுமை ஏற்பட்டிருக்கவில்லை. ஆனாலும், ஜின்னாவின் பலம் சீக்கிரத்தில் வளர்ந்துவிட்டபடியால் அவருடன் ஸிக்கந்தர் ஹயாத் கான் ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி நேர்ந்தது. அதன் பிரகாரம் யூனியனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் அங்கத்தினரையெல்லாம் அவர் முஸ்லிம் லீக் அங்கத்தினராக்கினார். அகில இந்திய பிரச்னைகளில் எல்லாம் முஸ்லிம் லீக்கின் ஆணையின்படி நடக்க ஒப்புக்கொண்டார்.

ஸர் ஸிக்கந்தர் துரதிர்ஷ்டவசமாகக் காலமான பிறகு, அவருடைய ஸ்தானத்துக்கு வந்த பிரதம மந்திரி கிஸர் ஹயாத் கான் என்பவரும் மேற்படி ஒப்பந்தத்தை அனுசரித்துக் காரியங்களை நடத்திக் கொண்டு வந்தார்.

"இது சரியல்ல; இனிமேல் பஞ்சாப் மந்திரி சபை பக்கா முஸ்லிம் லீக் மந்திரி சபையாக இருக்க வேண்டும்!" என்று ஜனாப் ஜின்னா சமீபத்தில் தாக்கீது விடுத்தார்.

ஜனாப் ஜின்னாவுக்கு இவ்வளவு பலம் எப்படி வந்தது? ஐந்து வருஷத்துக்கு முன்னால் எந்தவித பலமும் இல்லாமலிருந்தவர் இப்போது நாலு மாகாணங்களில் ஆட்சி செலுத்தவும், ஐந்தாவது மாகாண மந்திரி சபையைப் பயமுறுத்தவும் சக்தி பெற்றது எப்படி?

பஞ்சாப் சதுரங்கம்

ஒரு நாள் இரவு காயிதே ஆஜம் ஜனாப் ஜின்னா சாகிபு ஆனவர் புது டில்லி சிம்மாசனத்தில் தம்மை வைத்து இந்தியா தேசத்தின் ஷா இன் ஷாவாகப் பட்டாபிஷேகம் செய்து விட்டதாகக் கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்திருந்தார். உடனே, தமது மதி மந்திரியாகிய லியாகத் அலி கானை அலறி அழைத்து, "நான் ஏற்கெனவே சர்வ உலக சாம்ராஜ்யத்தின் பாதுஷாவாக முடி சூட்டிக் கொண்டிருக்கும்போது என்னை இந்தியாவின் ஷா இன் ஷா வாகப் பட்டாபிஷேகம் செய்யத் துணிந்தது யார்?" என்று அதட்டி விட்டு, "இருக்கட்டும்; நமது சாம்ராஜ்ய மெல்லாம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு லியாகத் அலி கான், "ஹுஜூர்! சாம்ராஜ்யம் திவ்யமாய் நடந்து கொண்டிருக்கிறது. நமது சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் எல்லாரும் தினம் மூன்றே அரைக்கால் தடவையாவது தங்களுடைய திரு நாமத்தை உச்சரிக்கத் தவறுவதில்லை!" என்றார்.

"மஹாத் அச்சா! நமது அருமை வங்காள மாகாணம் எப்படி இருக்கிறது?"

"நவாப் நாஜிமுதின் கானின் ஆட்சியில் வங்காளத்துக்கு ஒரு குறைவும் இல்லை. போன வருஷத்துப் பஞ்சத்தினால் இன்னமும் அங்கே ஜனங்கள் செத்துப் போய்க் கொண்டுதானிருக்கிறார்கள்!"

"வாஹ்ரேவாஹ்! வாஹ்ரேவாஹ்! ஸிந்து மாகாணம் எப்படி?"

"ரொம்ப ரொம்ப ஜோர்!"

"அஸ்ஸாம் மாகாணம்?"

"அங்கே தலை நீட்டத் துணிந்த ஜப்பானியப் போக்கிரிகளை நமது ஸர்தார் லார்ட் மவுண்ட் பேட்டன் அடித்து விரட்டிக் கொண்டிருக்கிறார்!"

"நன்றாக விரட்டட்டும். அப்புறம் நமது சாம்ராஜ்யத்தின் கண்ணுக்குக் கண்ணான பஞ்சாப் மாகாணம் எப்படி இருக்கிறது?"

"அங்கே மட்டுந்தான்......" என்று லியாகத் அலி கான் இழுத்தார்.

"அங்கே மட்டும் என்ன? ஜல்தி ஜவாப் கரோ!"

"அங்கே மட்டும் இன்னும் பிரிட்டிஷ் படே சாகிபுவின் அதிகாரந்தான் செல்லுகிறது!"

இதைக் கேட்டதும் ஷா இன் ஷா ஜின்னா அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து, "க்யா? கைஸா? க்யோ? கஹோ!" என்று கர்ஜனை செய்யவே, லியாகத் அலி கான், "ஆமாம், ஷா இன் ஷா! பஞ்சாப்பில் இன்னும் பிரிட்டிஷ் அதிகாரந்தான் நடைபெறுகிறது. இதற்கு அத்தாட்சி என்னவென்றால், பஞ்சாப் மந்திரி சபையில் பெரும்பாலோர் முஸ்லிம் லீக் அங்கத்தினராயிருந்தபோதிலும், அந்த மந்திரி சபைக்கு 'யூனியனிஸ்ட் மந்திரி சபை' என்ற பெயரே இருந்து வருகிறது. தங்களுடைய சர்வ உலக முஸ்லிம் லீக் சாம்ராஜ்யத்துக்கு இதனால் கொஞ்சம் அவமானம் ஏற்பட்டிருக்கிறது!" என்றார்.


உடனே, காயிதே ஆஜம் ஜின்னா கன வேகமாகக் கிளம்பி பஞ்சாப்புக்குப் போய், "இதோ சர்வ உலக சாம்ராஜ்ய பாதுஷாவாகிய நான் வந்து விட்டேன்! பஞ்சாப் மந்திரிகளே! இங்கே வாருங்கள்! உங்கள் பெயரை உடனே மாற்றிக் கொள்ளுங்கள். 'யூனியனிஸ்ட் மந்திரி சபை' என்பதற்குப் பதிலாக 'முஸ்லிம் லீக் கூட்டு மந்திரி சபை' என்று பெயர் வைத்துக் கொள்ளுங்கள். இல்லா விட்டால், பஞ்சாப் மாகாணத்தை நமது சாம்ராஜ்யத்திலிருந்து பிரித்துப் பாகிஸ்தான் ஆக்கி விடுவது மல்லாமல் நமக்குக் கப்பம் கட்டும் உரிமையையும் ரத்து செய்து விடுவோம்!" என்று பயமுறுத்தினார்.

இப்பேர்ப்பட்ட நெருக்கடியான சமயத்தில், "கப் ரதோ!" என்று ஒரு குரல் கேட்டது! இந்தக் குரல் வேறு யாருடைய குரலுமில்லை; பாஞ்சாலத்தின் உண்மைப் பாதுஷாவான பிரிட்டிஷ் படே சாகிபுவின் குரல்தான்.

அப்போது லீக் பாதுஷா ஜின்னாவுக்கு வெகு கோபம் வந்து, "யாரைப் பார்த்து 'கப் ரதோர' என்று சொன்னீர்? தும் கப் ரதோர! துமாரா நாத்தா

சோக முடிவு

-உம்மன்


இந்தக் குண்டோதரன் அவளுக்கு விலையுயர்ந்த பரிசுகளாக் கொடுத்து மகிழ்வித்தான்.
அதிகார வர்க்கம்
சிந்து மந்திரிசபை
வங்காள மந்திரிசபை
லீக்
என் காதலிக்கு
இன்னும் என்னவெல்லாமோ பரிசுகள் கிடைக்கும் என்று அவள் இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தாள்.
ஆனால் ... ஐயோ, பாவம்! தூங்கி எழுந்ததும் ஏற்பட்ட ஏமாற்றம்!
யூனியனிஸ்ட் மந்திரிசபை

காதல் நாடகத்தின்-



இளங் கன்னிப் பருவத்தில்
இந்த அழகான இளைஞனைக்
காதலித்தாள்.
அதிகார வர்க்கம்
வயதான பிறகு, இந்தக் குண்டோதரனுடன்
சல்லாபங்கள் செய்யத் தொடங்கிறாள்.
இருவரும் ஏகாதிபத்தியகீதத்தின் தாளத்துக்கிசைய
ஆடி மகிழ்ந்தார்கள்.

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 30

என்ன சேதி?

மகாத்மா வாழ்க!

"மகாத்மாவுக்கு மலேரியா சுரம்" என்ற செய்தி முதன் முதலில் வெளியானபோது தேசம் திடுக்கிட்டது. "சுரம் தேவலை; கவலைக்கிடமில்லை" என்று பின்னால் வந்த செய்தி ஒருவாறு ஆறுதல் அளித்தது. ஆனால் அத்துடன் விஷயம் நிற்கவில்லை. "எதிர்பார்த்தது போல் மகாத்மாவின் தேகநிலை அபிவிருத்தி யடையவில்லை" என்று ஒரு செய்தி வெளியாயிற்று. பிரசித்த வைத்தியர்களும், நிபுணர்களும் ஆகாகான் அரண்மனைக்குள் சென்று வந்தார்கள். கடைசியாக வந்த செய்தி, "மகாத்மாவின் இரத்த ஓட்டம் ரொம்பக் குறைந்திருக்கிறது; மறுபடியும் கவலைக்குக் கொஞ்சம் இடமேற்பட்டிருக்கிறது" என்று சொல்கிறது. மாமூல் வழக்கப்படி அதிகார வர்க்கத்தார் காரியம் மிஞ்சிப் போனபிறகு கையை விரிக்காமல் மகாத்மாவை உடனே பாதுகாப்பிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இது விஷயத்தில் சரியான காலத்தில் சரியான காரியத்தைச் செய்யாவிட்டால் பிரிட்டிஷ் சர்க்கார் அழிவில்லாத பழிக்கு ஆளாவார்கள். அப்புறம் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் சிநேகபாவம் என்பது பகற் கனவாக முடியும்.

மகாத்மாவைக் குணப்படுத்தி அவருக்குத் திடகாத்திர தேகத்தையும் நீர்க்காயுளையும் அளிக்கும்படியாக இறைவனை வேண்டுகிறோம். சுயராஜ்யம் வந்தால் வரட்டும்; வரா விட்டால் போகட்டும். காந்தி மகான் நம்மிடையே நீடூழி வாழ்ந்து வாழ்க்கையில் வழிகாட்டும் ஒளியாக விளங்கட்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

போட்டியின் வெற்றி

"கல்கி" சிறுகதைப் போட்டி நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மகத்தான வெற்றியடைந்திருக்கிறது. மொத்தம் ஒன்றேகால் ஆயிரம் (1250) கதைகள் வந்திருக்கின்றன. தமிழ் நாட்டில் ஆயிரம் பேருக்கு மேலே கதை எழுதும்படி தூண்டிய அளவில் இந்தச் சிறு கதைப் போட்டி பெரும் வெற்றியடைந்து விட்டது. அவற்றில் பிரசுரத்துக்குத் தகுதியான கதைகள், பரிசுக்கு உரிய கதைகள்,—எத்தனை என்பது பஞ்சாயத்தார் நிர்மாணிக்க வேண்டிய விஷயம். போட்டியில் கலந்துகொண்ட நேயர்கள் அனைவருக்கும் நமது வந்தனம்.

சிரஞ்சீவி கு. ப. ரா.

சிறு கதைப் போட்டியைப் பற்றி எழுதி விட்டு, உடனே தமிழ் நாட்டின் சிறந்த சிறுகதை ஆசிரியர் ஒருவர் காலமானது பற்றியும் எழுத வேண்டியிருப்பது நமது துரதிர்ஷ்டமாகும். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியாகிய பூஞ்செடியில், "ஒரே கொம்பில் பூத்த இரு மலர்கள்" என்று ஸ்ரீ ந. பிச்சமூர்த்தியையும், ஸ்ரீ கு. ப. ராஜகோபாலனையும் பற்றி முன்னொரு சமயம் "கல்கி"யில் குறிப்பிட்டிருந்தோம். அந்த இரு மலர்களில் ஒன்று கருகி உதிர்ந்து விட்டது. ஸ்ரீ கு. ப. ரா. வின் அகால மரணத்தினால் தமிழ்த் தாய் அடைந்துள்ள நஷ்டம் ஈடு செய்ய முடியாதது. ஆசிரியர் கு. ப. ரா. வின் மெலிந்த உடல் மறைந்து விட்ட போதிலும், அவர் எழுதியுள்ள அழியாப் புகழ் பெற்ற சிறு கதைகளிலே அவர் என்றும் சிரஞ்சீவியாக ஜீவித்திருப்பார் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



P.A. ராஜ செட்டியார் பிரதர்

தந்தி: ராஜா - கோயமுத்தூர் - போன். 218-A

முத்தமிழ் கலாவித்வ ரத்தின

T. K. S. சகோதரர்களின் நாடகவிழா!

காரைக்குடி

ஷண்முக விலாஸ் தியேட்டரில் ஆரம்பம்

★ சிவ லீலா ★

(தணிக்கை பெற்றது)

★

5-5-44 முதல் 20-5-44 வரை

தினமும் இரவு 10-30 மணிக்கு

M. S. B. S. சபையார்.

N. B:—வெளியூர் வாசிகள் இரண்டு நாட்களுக்கு முன்பே எமக்குக் கிடைக்கும்படி மணியார்டர் செய்தால் முதல் வகுப்பு மட்டும் ரிஸர்வ் செய்யப்படும்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 3 } இதழ் 30 } | 1944 மே 7 | { தாரண ௵ { சித்திரை 25

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.



கண்ணுக்குப் பார்ப்பதற்கு வெகு ரம்யமாய்த் தோன்றும் காட்சி; சிந்தித்துப் பார்த்தால் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்யும் காட்சி. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி, அவர்கள் பாடுபட்டுத் தேடும் பணத்தைப் பறித்து, அவர்கள் வீட்டில் அழுகுரலை எழுப்பும் கள்ளரக்கன், அந்த ஏழைகளின் தோள் மேலேயே சவாரி செய்கிற பரிதாபக் காட்சி இது!

சென்னை மாகாணத்தில் இந்த வருஷம் சர்க்கார் வருமானத்தில் ஆறு கோடி ரூபாய் மிஞ்சுகிறது. அதை இன்னது செய்வதென்று தெரியாமல் யுத்தத்துக்குப் பிறகு ரோடுகள் போடுவதற்காக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்! காங்கிரஸ் ஆட்சி இப்போது நடந்தால் சென்னை மாகாணத்திலிருந்து கள்ளை அடியோடு ஒழித்துவிடலாம்! அது முடியாமல் செய்துவிட்ட விதியை என்னவென்று சொல்வது?



அழகிய கூந்தல் - இதன் இரகசியம் என்ன?

உங்கள் கூந்தலை சரியாக பராமரித்து அழகுடனிருக்கச் செய்து வர தமயந்தி யின் நாட்களைப் போன்று சேடி பரி ஜனங்கள் இன்று தேவையில்லை. கூந்தல் தேங்கா யெண்ணெய் தினசரி நன்கு தேய்த்து ஷாம்பூவால் வாரா வாரம் கேசத்தை அலசிக் கழுவி வாருங்கள். அவ்வளவே! நல்ல மேனியும் பள பளப்பும் வாய்ந்த கூந்தலின் இரகசியம் என்ன வென்பது உங்களுக்குத் தானா கவே விளங்கும்.

•



டாம்கோ கூந்தல் தேங்கா யெண்ணெயும் ஷாம்பூவும்

•

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

அன்னை கஸ்தூரிபாய் காந்தி மறைந்தார்!
பாரதநாட்டுக்கு அவரது சேவை மகத்தானது!

அவரை நமக்கு என்றும் நினைவூட்டும்
அவரது புகழ்பாடும் புதிய ரிகார்டு



ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

முகமத் இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. வெண்டர்ஸ் டிரேடிங் கம்பெனி, மதுரை.
ஸௌத் இந்தியா மியூஸிக் எம்போரியம், சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சினாப்பள்ளி.
V. S. ராஜகோபாலன் & கம்பெனி, மதராஸ், மங்களூர், கோயமுத்தூர், சேலம்.
M. A. ஹிருதயஸ்வாமி & கம்பெனி, உதகமண்டலம்.